For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

ஏப்ரல் 2025 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் விலை : ரூ 60 இதழ் 59




ஹென்றி லிட்டில் ஆலயம்


சுவடுகளில் ஒரு பயணம்

யாரோ செய்யட்டும் என்றல்ல நான் செய்வேன் என்ற பாரத்தோடு ஆண்டவரின் தரிசனத்தை நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம்..


- திருச்சபையில் கற்பகம்..
- சுவடுகளில் ஒரு பயணம்..
- பாரெங்கும் பேராலயங்கள்..
- திருச்சபை வரலாறு..
- உலகப் புகழ்பெற்ற சேலம் இரும்பு..
- ஹென்றி லிட்டில் ஆலய வரலாறு..
- புகழ்பெற்ற நாவல்..

இதழின் உள்ளே ...

உலகப் புகழ்பெற்ற சேலம் இரும்பு

www.christianhistoricalsociety.in

www.christianhistoricalsociety.in

# பதிப்பாசிரியரிடமிருந்து...

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்**

"யாரோ செய்யட்டும் என்றல்ல நான் செய்வேன் என்ற பாரத்தோடு ஆண்டவரின் தரிசனத்தை நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம்." இன்றைய நாட்களில் திருச்சபை வரலாற்றை தெரிந்துகொள்ளவும், வரலாற்றை ஆராயவும் திருச்சபை இளைஞர்கள் பலர் முன்வந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. வரலாற்றுச் சங்கமும் பல்வேறு வழிகளில் முன்னேறிவருகின்றது. கர்த்தருடைய கரம் நம்மோடு இருக்கின்றது. முழு இருதயத்தோடும், ஞானத்தோடும் வரலாற்றுச் சங்க பணிகளில் எங்களை ஈடுபடுத்திக்கொள்ளவும் அறிவார்ந்த தேவ நடத்துதலுக்காகவும், வரலாற்று நற்செய்திப் பணியினை பெருமளவும் செய்யவும் தொடர்ந்து சங்கத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

'வரலாற்றுச் சுவடுகள்' மாத ஆய்விதழ், நமது தமிழ் மண்ணின் மறைந்துபோன வரலாற்றையும், கலாச்சாரத்தையும் வெளிக்கொணரும் ஒரு பொக்கிஷம். ஒவ்வொரு மாதமும், ஆழமான கள ஆய்வுகளோடும், ஆய்வுப்பூர்வமான கட்டுரைகளோடும் இந்த இதழ் வெளிவருகிறது. நமது திருச்சபையின் கடந்த காலத்தைப் பற்றிய உண்மைகளை அறியவும், நம் முன்னோர்களின் சாதனைகளை நினைவுகூரவும் இது ஒரு சிறந்த வாய்ப்பு.

எனவே, வரலாற்று ஆர்வலர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் இந்த இதழை வாசிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இதை அறிமுகப்படுத்துவதன் மூலம், நமது திருச்சபை வரலாற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல உதவலாம்.

இந்த இதழைத் தொடர்ந்து வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் ஏற்படுகின்றன. எனவே, சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை புதுப்பித்து, இதழின் தொடர்ச்சியான வெளியீட்டிற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த வரலாற்றுப் பணியை முன்னெடுத்துச் செல்ல, நன்கொடை மற்றும் காணிக்கைகள் வழங்க இயன்றவர்கள் முன்வர வேண்டும் என்றும் வேண்டுகிறேன். சந்தா மற்றும் நன்கொடை விவரங்கள் இதழின் உள்ளே கொடுக்கப்பட்டுள்ளன. உங்கள் ஆதரவு, நமது வரலாற்றை பாதுகாக்கவும், அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும் உதவும்.

பராபரனின் பணியில்

Manna Selvakkumar


மன்னா செல்வகுமார்
ஆசிரியர்

சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு


G Pay

கிறிஸ்தவ
**வரலாற்றுச் சுவடுகள்**

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
( CHRISTAVA VARALATRU SUVADUGAL )
என்ற பெயரில் எடுக்கவும்

**Contact Us**


**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com

+91 9176780001 www.christianhistoricalsociety.in


இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,

மன்னா செல்வகுமார்

# வரலாற்றுச் சுவடுகளில் ஒரு பயணம்..

## மார்ச் 08..

www.christianhistoricalsociety.in

மிஷன் வரலாற்றுச் சுற்றுப்பயணமாக ஒருங்கிணைந்த திருநெல்வேலி பகுதிகளில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும், இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக லெந்து நாட்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கடந்த 08.03.2025 அன்று காலை பரி. திரித்துவ பேராலயத்தில் (கதீட்ரல்) சங்க உறுப்பினர் இரயில் ரவி அண்ணன் ஜெபிக்க சுற்றுப்பயணம் ஆரம்பமானது. இதில் திண்டுகல், தென்காசி, திருநெல்வேலி போன்ற இடங்களில் இருந்து வந்திருந்த பெரியவர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் சுமார் 30 பேர் கலந்து கொண்டனர்.

பேராலயத் தலைமை குருவானவர் அருள்திரு. பாஸ்கர் கனகராஜ் ஐயரவர்கள் வந்திருந்த அனைத்து உறுப்பினர்களையும் விசாரித்து ஆலோசனை வழங்கி சுற்றுப்பயணம் சிறப்பாக அமைய வாழ்த்துகளை சொல்லி விடைபெற்றார். பேராலய வரலாற்றை பகிர்ந்து கொண்டு அங்கு காலை உணவு அருந்தினோம்.

நெல்லை திருச்சபை உருவாக காரணமாக இருந்த குளோரிந்தாள் ஆலயம், நினைவிடம், அங்கு விதைக்கப்பட்ட மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் நினைவு கூர்ந்தோம். குறிப்பாக சாயர்புரம் உருவாக காரணமாக இருந்த சாமுவேல் சாயர் அவர்கள் நினைவிடம் பார்த்தோம். பாளையம்கோட்டையில் உள்ள மில்டரி லைன் ஆலயத்தில் உள்ள பேராயர். சார்ஜென்ட் மற்றும் வேதாகம மொழிபெயப்பு பணி செய்த கனம். ஹென்றி பவர் நினைவிடம் மற்ற மிஷனெரிகளின் நினைவிடங்களையும், அவர்கள் செய்த பணிகளையும் நினைவு கூர்ந்தோம்.

பின்னர் அங்கிருந்து தூத்துக்குடி நாசரேத் திருமண்டல தூய யோவான் பேராலயம் (கதீட்ரல்) சென்றோம். சங்க உறுப்பினர் பேராசிரியர். கெர்சோம் ஜெபராஜ் அவர்கள் வரவேற்று அறிமுகபடுத்தினார். தூத்துக்குடி நாசரேத் திருமண்டல பேராலய குருவானவர் அருள்திரு. ஹென்றி ஐயரவர்கள் சிறப்பாக வரவேற்று உதவி குரு அருள்திரு. செல்வின் அவர்கள் வரலாற்றை பகிர்ந்து கொண்டார்கள். நாசரேத் சபை உருவான விதம் ஆர்தர் மார்காஷிஸ் காலரா காலத்தில் ஆற்றிய பணிகள் மற்ற மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் விவரித்தார்கள். நினைவிடங்களையும் அவர் வசித்த இடத்தையும் பார்த்தோம்.

நாசரேத் மாநகரில் 1900 ம் வருடம் கனம் மார்காஷியஸ் ஐயரவர்கள் 8 மாணவர்களுடன் நாசரேத் இறையியல் கல்லூரியை (Nazareth Theological Seminary) ஆரம்பித்தார்கள்.








பின்னர் 1910ம் வருடம் கனம் C. W. வெஸ்டன் ஐயரவர்களின் காலத்தில் கல்லூரி புதிய வடிவத்தை பெற்றது. நாசரேத் இறையியல் கல்லூரி என்ற பெயரில் இருந்து பிஷப் இறையியல் கல்லூரி (Bishop Theological Seminary) என்ற புதிய பெயரை பெற்றது. அந்த இடத்தில் தற்பொழுது பேராயர் நீல் பங்களாவும் புரனமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கு அருள்திரு. H. ஜான் சாமுவேல் ஐயரவர்கள் எங்களை வரவேற்று வரலாற்றை பகிர்ந்து கொண்டார்கள். அங்கு மதிய உணவு அருந்தினோம்.

பின்பு தென் நெல்லை அப்போஸ்தலர் கனம் ஜாண் தோமாஸ் அவர்கள் செய்த பணிகளையும் நினைவிடத்தையும் புதிதாக துவங்கப்பட்டுள்ள ஜாண் தோமாஸ் மியூசியம் சென்று பார்த்தோம். அங்கு எங்களை மெஞ்ஞானபுரம் சேகர தலைவர் அருள்திரு. டேனியல் எட்வின் ஐயரவர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். அங்கு மகமை கமிட்டி பொருளாளர் திரு. சொர்ணராஜ் மற்றும் கல்வாரி சேப்பல் திரு. குணசேகரன் அவர்கள், திரு. செல்வராஜ் அவர்கள் தேனீர் உதவிகளை செய்து அனைவருக்கும் கைபிரதிகளை கொடுத்தார்கள்.

திருநெல்வேலியின் முதல் குடியிருப்பு கிராமமான முதலூரில் தூய மிகாவேல் முதலான சகல சம்மனசுகளின் ஆலயம் சென்றோம். அங்கு சேகர பொருளாளர் திரு. சாந்தராஜா ஆசிரியர் அவர்கள் எங்களை வரவேற்றார். முதலூர் சேகர குருவானவர் அருட்திரு. K. செல்வன் மகாராஜா ஐயரவர்கள் முதலூர் ஆலய வரலாற்றை பகிர்ந்துகொண்டார்கள். அங்கு சுவிசேஷகர் தாவீது சுந்தரானந்தன் மற்றும் Rev. H. B. நார்மன் அவர்களின் பணிகளை தெரிந்து கொண்டோம்.

திராவிடம் என்ற இனத்துக்கு மூல முகவரி தந்த திராவிட ஒப்பிலக்கணதந்தை பேராயர் கால்டுவெல் அவர்களின் நினைவிடம் சென்றோம். அங்கு பேராயர் கால்டுவெல் நினைவிடத்தையும் எலைசா கால்டுவெல் செய்த பணிகளையும் தெரிந்துகொண்டோம். தென்னிந்திய மொழிகளுக்கான ஒப்பிலக்கண நூல் மற்றும் அவர் எழுதிய 'திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறுகள், சங்க இலக்கியங்கள், அகழ்வாய்வுகளில் ஈடுபட்டுப் பல பண்டைய கட்டிடங்களின் அடிப்படைகளையும், ஈமத் தாழிகள், நாணயங்கள் முதலானவற்றையும் வெளிக் கொணர்ந்துள்ளார்' என்ற வரலாற்றை தெரிந்து கொண்டோம்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் உறுப்பினர் இரயில் ரவி அண்ணன் மற்றும் பிரின்ஸ் ராஜா அவர்களுக்கும். இந்த வரலாற்றுச் சுற்றுப்பயணத்திற்கு பெரிதும் மாணவர்களுக்காக உதவி செய்த மணியாச்சி-கடம்புர் ஜமீன் வழி வந்த மனுவேல் தலைவர் ஐயா அவர்களின் குடும்பத்திற்கும் நன்றி. சங்கத்தின் சார்பில் சங்க பணிகளை வந்திந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் மன்னா செல்வக்குமார் பகிர்ந்து கொண்டு அனைவருக்கு நன்றி தெரிவித்தார். இந்த மிஷன் வரலாற்றுச் பயணத்திற்கு அனைத்து வகையிலும் உதவி தூத்துக்குடி நாசரேத் குருமார்கள், மற்றும் திருநெல்வேலி குருமார்கள் அனைவருக்கும் வரலாற்றுச் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.











# பாரெங்கும் பேராலயங்கள் 3



பார்சிலோனா கதீட்ரல் (BARCELONA CATHEDRAL)

**சந்திரா மனோகரன், ஈரோடு.**

ஸ்பெயின் நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய நகரமான பார்சிலோனா எசுபானியாவில் உள்ள புகழ்பெற்ற பெருங்கோயில் தான் பார்ஸிலோனா கதீட்ரல். காடலான் கோதிக் கட்டிடக்கலையில் அமைந்துள்ள இவ்வாலயம், ரோமானியக் காலத்தில் ரத்த சாட்சியாக 13 வயதில் மரித்துப்போன புனித எலுலேயா மற்றும் புனித சிலுவை ஆகியோருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. புனித எலுலேயாவின் உடல் இக்கோவிலின் நிலவறையில் உள்ளதாக சொல்லப்படுகிறது.

கத்தோலிக்க உயர்மறை மாவட்டத்தின் பேராலயமாகத் திகழும் இது 13ஆம் 15 ஆம் நூற்றாண்டின் காலகட்டத்தில் கட்டப்பட்டது. இந்த கத்தீட்ரல் முந்தைய ரோமான்ஸ் கத்தீட்ரல் மற்றும் முந்தைய பேலியோ கிறிஸ்தவ கத்தீட்ரல் இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ளது.

1448 ஆம் ஆண்டு காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட இக்கோயிலின் உள்ளே, குளோஸ்டர்கள் என்று அழைக்கப்படும் திறந்த வெளி தோட்டத்தில் உள்ள குளத்தில் 13 வெண்மை நிற வாத்துக்களை நீந்த விட்டிருக்கிறார்கள். இது எதை குறிக்கிறது என்றால் புனித எலுலேயா வாழ்ந்த 13 ஆண்டுகளில் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒன்று என்பதை குறிக்கிறது என்கிறார்கள்.

இதை 'வாத்துகளின் கிணறு' என்றும் கூறுகிறார்கள். இந்த 13 வாத்துகள் விஷயத்தில் ஒரு கட்டுக் கதையையும் அவிழ்த்து விட்டு இருக்கிறார்கள். இந்த கதீட்ரல் கட்டும் பணி தொடங்கிய போது அந்த இடத்தைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருந்தவர், செல்லப் பிராணிகளான வாத்துகளை வைத்து இருந்ததாகவும் ஒரு கதை. ஒரு நாள் திருட்டு முயற்சியை வாத்துகள் முறியடித்ததாகவும் சொல்லப்படுகிறது. கதீட்ரலின் கூரை முழுவதையும் பல்வேறு விலங்குகளின் சிற்பங்கள், புனிதர்கள், புராண உயிரினங்கள் முதலியவை அலங்கரிக்கின்றன.

இந்த பேராலயத்தைப் பற்றிய மேலும் சில சுவாரசியமான தகவல்கள்:

இது ஹோலி கிராஸ் மற்றும் செயின்ட் எலுலேயாயாவின் கதீட்ரலாக இருந்தாலும் எல்லோரும் இதை 'பார்சிலோனா கதீட்ரல்' என்றுதான் அழைக்கிறார்கள். இந்தக் கதீட்ரலின் முகப்பு மற்றும் விளக்குகள் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் அதாவது போதிக் ஸ்டைல் மறுமலர்ச்சி காலத்திலும் கட்டப்பட்டது. இதில் மொத்தம் 21 மணிகள் உள்ளன. இவற்றில் சில மிகவும் பழமையானது என்பதால் செயல்படுவதில்லை. மிகவும் பழமையான மணி 1321 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது என்கிறார்கள். அண்மையில் 1998 இல் உருவாக்கப்பட்ட மணி 3 டன்களுக்கு மேல் எடையுள்ளது.

இந்தப் பெருங்கோயில் கட்டிடக்கலை கண்ணோட்டத்தில் மட்டுமல்லாமல் கலை நுட்பத்திலும் சிறந்து விளங்குகிறது. இதனுள் தங்கம் மற்றும் ரத்தினக் கலைப் பொருள்கள் செதுக்கப்பட்ட பளிங்குக் கற்கள்... இன்னும் மன்னரின் சிம்மாசனம் போன்றவை பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

13 வயதே நிரம்பிய சிறுமி எலுலேயா நாலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதற்காக, 13 வெவ்வேறு வகைகளில் சித்திரவதை செய்யப்பட்டு, பொது சதுக்கத்தில் வைத்து கொல்லப்பட்டார். கி. பி. 633 -இல் இவருக்குப் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. ரோமானிய பேரரசின் ஆட்சியின் போது இவரைப் போல் பல கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டது வரலாறு.

பார்சிலோனாவின் மிக முக்கியமான தேவாலயமாகவும் பார்சிலோனாவின் பேராயரின் இடமாகவும் இது திகழ்கிறது. பார்சிலோனா கதீட்ரல் 'இது தெய்வீகம் பூமிக்குரியதை சந்திக்கும் இடமாகவும், வரலாறும் ஆன்மாவும் சங்கமிக்கும் இடமாகவும்' திகழ்வதாக ஒரு குறிப்பு சொல்லுகிறது.

# திருச்சபையில் கற்பகம்



திரு. I.இஸ்ரவேல் ஜெபராஜ்



சத்தியநாதன்

திருநெல்வேலி திருச்சபையின் தந்தை என்று அறியப்படும் கிறிஸ்டியன் பிரட்ரிக் ஸ்சுவாட்ஸ் ஐயரால் உருவாக்கப்பட்ட மிகச்சிறந்த ஊழியர்களுள் ஒருவர் கற்பகம் சத்தியநாதன்பிள்ளை. திருநெல்வேலி திருச்சபையின் ஆதி அப்போஸ்தலர்களில் ஒருவராக கருதப்படும் கற்பகம் சத்தியநாதன் பிள்ளை அவர்கள் திருநெல்வேலி மிஷனின் முதல் குருவாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இளமைப்பருவம்

1753 ஆம் ஆண்டில் உத்தமபாளையத்தில் வர்த்தகரும் செல்வந்தருமான அம்மையப்ப பிள்ளைக்கு ஒரே மகனாகப் பிறந்தவர் கற்பகம் பிள்ளை. இளம் வயதில் தன் தகப்பனை இழந்ததால் தன் தாயுடன், தன் தாய் மாமனான சிதம்பரம்பிள்ளை வீட்டில் வளர்ந்தார். அங்குள்ள ஒரு கிராமப்பள்ளியில் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார். இளமைப்பருவம் கடந்ததும் திருமணம் செய்து கொண்டார். தன் மார்க்கம் மீது மிகுந்த பக்தி வைராக்கியம் கொண்டவராக இருந்த போதிலும், தன் மார்க்க காரியங்களில் திருப்தி இல்லாத நிலையில் இருந்தார்.

### கிறிஸ்துவை அறிதல்:

1722 ஆம் ஆண்டு திருச்சி மலைக்கோட்டைக்கு அருகில் உள்ள உறையூரில் தெருவோரம் தரங்கம்பாடி மிஷனரி ஸ்வாட்ஸ் ஐயரின் சபை ஊழியர்களின் பிரசங்கம் மூலம் கிறிஸ்துவைக் குறித்து அறிந்து கொண்டார். கிறிஸ்துவின் மூலமாய் அன்றி இரட்சிப்பு இல்லை என்பதை உணர்ந்தார். ஸ்வாட்ஸ் ஐயரின் சபை ஊழியர்கள் தூரமான கிராமங்களுக்கு சென்று நற்செய்தியை அறிவிப்பார்கள். ஆர்வமுடன் இருப்பவர்களை ஸ்வாட்ஸ் ஐயரிடம் அழைத்து வருவார்கள். ஸ்வாட்ஸ் ஐயர் அவர்களுக்கு அதிகமாக கிறிஸ்து மார்க்கத்தை போதிப்பார். அவ்வாறு அழைத்து செல்லப்பட்டார் கற்பகம்.



ஸ்வாட்ஸ்

ஸ்வாட்ஸ் ஐயரை கண்ட கற்பகம் அவரைக் கண்டு பயந்து விலகிப் போனார். அதை கவனித்த ஸ்சுவாட்ஸ் ஐயர் அவரைதொடர்ந்துபோய், அவரிடம், 'மைந்தா, கிடையொன்றில்

வெள்ளைநிற ஆடுகளும், கருப்புநிற ஆடுகளும் உண்டு. நான் குளிர் நாட்டில் பிறந்ததினால் என் தோல் வெள்ளையாயிருக்கிறது. நாமெல்லாரும் ஒரே மந்தையின் ஆடுகள். என்னைக் கண்டு அஞ்ச வேண்டாம்' என்று கூறி, ஆண்டவருடைய அன்பை அவருக்கு அறிவித்தார். ஸ்வாட்ஸ் ஐயரின் சபை ஊழியர்களில் ஒருவரான தேவநேசன் அவர்களுடன் மிகுந்த நட்பு பாராட்டின கற்பகம், அடிக்கடி ஸ்வாட்ஸ் ஐயரை சந்தித்து இன்னும் அதிகமாக ஆண்டவரை அறிந்து கொண்டு விசுவாசத்தில் வளர்ந்தார்.

### திருச்சபையில் கற்பகம்:

திருச்சி சென்று ஸ்சுவாட்ஸ் ஐயரை சந்தித்து ஞானஸ்நான ஆயத்தகாரராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். பின்னர் உத்தமபாளையம் வந்து தன் மனைவியையும் தாயையும் திருச்சிக்கு ஸ்சுவாட்ஸ் ஐயரிடம் அழைத்து செல்ல விரும்பினார். அவரது மனைவி அந்த அழைப்பை மறுத்துவிடவே, தன் தாயாரை மாத்திரம் திருச்சி அழைத்துச் சென்றார். அங்கு 1772 ஆம் ஆண்டு சத்தியநாதன் என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்றார். அவரது தாயாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு சாந்தாயி என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவின் மந்தையில் ஐக்கியமானார்.

### சத்தியநாதனும் ஸ்வாட்ஸ் ஐயரும்:

ஸ்சுவாட்ஸ் ஐயரின் முக்கிய சீடர்களில் ஒருவராய் மாறிப்போன சத்தியநாதன் அவரிடம் கிறிஸ்தவ அறிவையும், வேத அறிவையும் கற்றார். மேலும் பிரசங்கம் பண்ணவும், மற்றவர்களுடன்கிறிஸ்துமார்க்கத்தைகுறித்துகலந்துரையாடவும் கிறிஸ்தவர்களுக்கு உபதேசிக்கவும் கற்றுக்கொண்டார். ஸ்வாட்ஸ் ஐயர் சத்தியநாதனை உண்மையுள்ள மனிதராகக் கண்டார். ஸ்வாட்ஸ் ஐயரின் உதவியாளராக தன் பணியைத் தொடங்கின சத்தியநாதன் கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராக வளர்ந்தார். அருளுரைகள் ஆற்றுவதில் அவருடைய வளர்ச்சி ஸ்வாட்சை மனநிறைவடைய செய்தது. வல்லம் என்ற சபையில் சத்தியநாதனை சபை ஊழியராக நியமித்து அவருடைய ஊழியத்தில் திருப்தி கண்டார்.

### சத்தியநாதனும் தேவநேசனும்:

தேவநேசன் உபதேசியருடன் இணைந்து தனது மனைவியின் ஊரான ராச்சத்திரம் சென்று தன் உறவினர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க முயற்சி செய்தார். மிகுந்த எதிர்ப்பை சந்தித்தார். அவருடைய மாமியோ, 'என்னுடைய கூடையில் அநேக தெய்வங்கள் உண்டு. உன்னுடைய தெய்வம் எனக்கு வேண்டாம். தேவநேசனுடன் வந்ததால் உன்னை சும்மா விடுகிறேன்.' என்று ஆவேசமாக முழங்கினார். ஆயினும் சத்தியநாதன் பொறுமையாக ஆண்டவருடைய அன்பை அறிவிக்க முயன்றார். அடிக்கடி அங்கு சென்று பிரசங்கித்து வந்தால் அவருடைய உறவினர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தனர். அவருடைய மனைவியும் அவருடன் சேர்ந்து கொண்டார்.

### சத்தியநாதனும் குளோரிந்தாள் அம்மாளும்

1778 ஆம் ஆண்டில் ஞானஸ்நானம் பெற்ற குளோரிந்தாள் அம்மையாரின் சுவிசேஷப் பணியால் 1780 ஆம் ஆண்டில் 40 பேர்கள் அடங்கிய சிறிய சபை ஒன்று திருநெல்வேலி திருச்சபை என்னும் பெயரில் சுவாட்ஸ் ஐயரால் நிறுவப்பட்டது. சபையின் வளர்ச்சி கருதி ஓர் உபதேசியாரை அனுப்பும் எண்ணம் கொண்ட சுவாட்ஸ் ஐயர் தமது சிறந்த சீடர்களில் ஒருவரான சத்தியநாதனை 1785ஆம் ஆண்டு இறுதியில் பாளையங்கோட்டைக்கு அனுப்பினார். சத்தியநாதன் திருநெல்வேலி சபை ஊழிய பொறுப்பேற்ற நாள் முதல் குளோரிந்தாள் அம்மையார் சத்தியநாதனிடமே அனைத்து பொறுப்புகளையும் ஒப்படைத்தார். அதுவரை தான் பெற்றுவந்த முதலிடமான அனைத்தையும் சத்தியநாதனுக்கு விட்டுக்கொடுத்தார்.

### குருவபிஷேகம்:

ஒவ்வொரு ஆண்டும் தரங்கம்பாடியில் இருந்தும் தஞ்சாவூரில் இருந்தும் மிஷனரிகள் குருவானவர் ஒருவரை அனைத்து சபைகளுக்கும் அனுப்பி மக்களின் விசுவாச வாழ்வையும், சபையின் நிலையையும் அறிந்து கொண்டு திருவிருந்து ஆராதனை நடத்தி சபைகளை பலப்படுத்தினர். 1789 ஆம் ஆண்டு தஞ்சாவூரில் இருந்து திருநெல்வேலிக்கு குருமாரை அனுப்புவதில் இடையூறுகள் அதிகரித்து வந்தன. எனவே திறமையும், உண்மையும் நற்சான்று பெற்றவருமாயிருந்த சத்தியநாதனுக்கு குருவபிஷேகம் கொடுக்க தீர்மானித்தனர். 1790 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் நாள் தஞ்சாவூரில் வைத்து சத்தியநாதன் குருப்பட்டம் பெற்று திருநெல்வேலி மிஷனின் முதல் குருவானவரானார்.

### சத்தியநாதன் ஐயரும் ஜெனிக்கே ஐயரும்:

1790 ஆம் ஆண்டில் திருநெல்வேலி சபையின் மக்கள் தொகை 300 ஆக உயர்ந்தது. சபை நாளுக்கு நாள் வளர்ச்சி கண்டதால் ஒரு ஐரோப்பிய மிஷனரி தங்கி பணி செய்வது நலமென்று கண்டதால் 1788 இல் தமிழகம் வந்திறங்கின ஜெனிக்கே ஐயர் 1791 இல் பாளையங்கோட்டைக்கு அனுப்பப்பட்டார். சத்தியநாதன் ஐயர் மற்றும் ஜெனிக்கே ஐயர் ஆகியோரின் உழைப்பின் பயனால் சபை மக்கள் எண்ணிக்கை 383 ஆக உயர்ந்தது. சத்தியநாதன் ஐயரும் ஜெனிக்கே ஐயரும் ராமநாதபுரம், தூத்துக்குடி, மணப்பாடு போன்ற இடங்களில் சுற்றி திரிந்து பிரசங்கித்து வந்தனர். காய்ச்சலினால் அடிக்கடி பாதிக்கப்பட்ட ஜெனிக்கே ஐயர் பாளையங்கோட்டை சென்றார். தொடர்ந்து பாதிக்கப்பட்டதால் தஞ்சாவூருக்கு சென்றார். 1795 ஆம் ஆண்டு சத்தியநாதன் உபதேசித்து வந்த ராமநாதபுரத்தில் சிலர் ஞானஸ்நானம் பெற விரும்பியதால் ஜெனிக்கே ஐயர் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். பின்னர் ஜெனிக்கே ஐயர் தஞ்சாவூருக்கும் சத்தியநாதன் பாளையங்கோட்டைக்கும் சென்றனர்.

### சத்தியநாதன் ஐயரும் தாவீது சுந்தரானந்தனும்:

1796- ஆம் ஆண்டு ஞான உபதேசங்களைக் கற்றுக் கொடுக்கவும், ஞானஸ்நான ஆயத்தக்காரர்களை வழி

நடத்தவும், திருவிருந்து ஆராதனைகளில் உதவி செய்யவும் ஒரு உதவியாளர் வேண்டுமென சத்தியநாதன் ஐயர் சுவாட்ஸ் ஐயரிடம் கேட்டுக் கொண்டதினால் தாவீது சுந்தரானந்தன் உபதேசியாராக நியமிக்கப்பட்டார். பாளையங்கோட்டையை சுற்றியுள்ள கிராமங்களில் அலைந்து சுவிசேஷம் கூறி வந்தனர். சிலநாட்கள் கழித்து சத்தியநாதன் ஐயர் அனுமதியுடன் தாவீது தன் சொந்த ஊரான விஜயராமபுரம் சென்று தன் உறவினர்களுக்கு கிறிஸ்துவின் அன்பை அறிவித்தார். தன் உறவினர்கள் அடங்கிய ஓர் சபையையும் உருவாக்கினார். பின் பாளையங்கோட்டை சென்று சத்தியநாதன் ஐயரிடம் நடந்தவைகளை விவரித்தார். அங்கு ஒரு உபதேசியாரை நியமிக்க வேண்டும் என்று எண்ணிய சத்தியநாதன்ஐயர்தாவீதையேஅங்குஉபதேசியாராகநியமித்தார். தாவீது விஜயராமபுரம் சென்றடைந்த அந்த வாரத்திலேயே சத்தியநாதன் ஐயரும் அங்கு சென்றடைந்தார். அங்கு தாவீதின் உறவினர்களுட்பட அனைவருக்கும் சுவிசேஷத்தை இரவு பகல் பாராமல் போதித்தனர். இரவு நிலவொளியில் அமர்ந்து மக்கள் அவர்களுடைய போதனைகளை கேட்டனர். விஜயராமபுரம், சண்முகபுரம் ஆகிய இரண்டு ஊர்களிலும் பதினாறு நாட்களாக தொடர்ந்து போதித்ததன் பயனாக 1797 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் நான்கு குடும்பத்தை சேர்ந்த இருபது பேருக்கு சண்முகபுரத்தில் வைத்து சத்தியநாதன் ஐயர் ஞானஸ்நானம் கொடுத்தார். பின்னர் அக்டோபரில் விஜயராமபுரத்தில் இருபது பேர் ஞானஸ்நானம் பெற்றனர். பின்னர் 1798 ஆம் ஆண்டில் இருவரும் இணைந்து சாத்தான்குளம், உடன்குடி, திசையன்விளை, உவரி, குலசேகரபட்டினம், தென்திருப்பதி, ஆழ்வார்திருநகரி என்ற பகுதிகளை சுற்றிலும் உள்ள கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தனர். அந்நாட்களில் புதிதாக கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு மற்றவர்களால் துன்பங்கள் உண்டாயின. எனவே தாவீது அடையல் அருகில் ஜெனிக்கே ஐயரின் பெயரில் ஓர் நிலத்தை வாங்கி அதில் அவர்களை குடியேற்றினார். அங்கு எவ்ரெட் என்ற படைத்தலைவரின் உதவியால் ஒரு ஜெபவீட்டையும், ஒரு கிணற்றையும் உண்டாக்கினார்.

### சத்தியநாதன் ஐயரும் ராயப்பன் ஐயரும்:

தொடர்ச்சியாக புதிய கிராமங்களில் நற்செய்தியை அறிவித்து வந்தார் சத்தியநாதன் ஐயர். 1789 இல் சபைகளை பார்வையிட அருள்திரு. ராயப்பன் அனுப்பப்பட்டார். 1789 ஜீலையில் சத்தியநாதனும் ராயப்பனும் இணைந்து தூத்துக்குடியில் 226 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தனர். கன்னியாகுமரி மாவட்டம் ஜேம்ஸ் நகருக்கு அருகில் உள்ள பிச்சைகுடியிருப்பு என்ற சபையில் 25 பேர் சத்தியநாதன் ஐயரால் ஞானஸ்நானம் பெற்றதாக ரிங்கிள்தொபே குறிப்பிடுகிறார்.

### சத்தியநாதன் ஐயரும் ஜெரிக்கே ஐயரும்:

சுவாட்ஸ் மற்றும் ஜெனிக்கே ஐயரின் மரணத்திற்கு பின்னர், ஜெரிக்கே ஐயர் ஐரோப்பிய அருட்தொண்டர்களில் முதன்மையானவராக இருந்தார். சென்னையில் தங்கி இருந்து சபைகளை விசாரித்து வந்த அவர் தென்பகுதியில் கிறிஸ்தவர்கள் படும் இன்னல்களை கேள்வியுற்று பாளையங்கொட்டைக்கு வந்தார். ஒரு சில நாட்கள் மட்டுமே பாளையங்கோட்டையில் தங்கியிருந்த அவர் சத்தியநாதன் ஐயரின் ஊழியத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். ஞானஸ்நான ஆயத்தக்காரர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இருந்ததைக் கண்டு வியப்புற்றார். தன் பயணக் காலத்தில் ஞானஸ்நானம் கொடுத்த 1300 மக்களை சத்தியநாதன் பொறுப்பில் விட்டுச் சென்றார். சத்தியநாதன் ஐயரும், ஜெரிக்கே ஐயரும் ஞானஸ்நானம் கொடுத்தவர்களில் பலர் பொதுவாக வாசிக்க இயலாதவர்களாக இருந்தனர். ஆயினும் அவர்கள் கர்த்தருடைய ஜெபம், விசுவாசபிரமாணம், பத்து கட்டளைகள் போன்றவற்றை மனப்பாடமாக கற்று அறிந்திருந்தனர்.

### ஊழியத்தின் இறுதி நாட்கள்:

சத்தியநாதன் ஐயரின் இறுதி ஊழிய நாட்கள் மிகவும் வேதனையானதாவே இருந்தது. அவருடைய உதவி ஊழியர்களுடைய செயல்பாடுகள் அவருக்கு வெறுப்பைக் கொடுத்தது. தாவீது சுந்தரானந்தத்தின் தடிக்கம்பு சேனை என்று அழைக்கப்பட்ட வாலிபர் சேனையை அவர் வெறுத்தார். அவரை உபதேசியார் பொறுப்பில் இருந்து நீக்கினார். அவருடன் நட்பில் இருந்த மிஷனெரிகள் மீதும் வருத்தமுடையவராக காணப்பட்டார். 1805 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் திருநெல்வேலி ஊழியத்தை விட்டு விலகுவதாக கோல்ப் ஐயருக்கு தெரிவித்தார். கோல்ப் ஐயரும் அதை ஏற்றுக் கொள்ளவே சத்தியநாதன் ஐயர் தன் ஊழியத்தை அதனுடன் முடித்துக் கொண்டார். 1805 ஆம் ஆண்டு தஞ்சை திரும்பிய சத்தியநாதன் ஐயர் 1815 ஆம் ஆண்டு தான் மரணமடையும் நாள் வரை ஓய்வு பெற்ற நிலையில் வாழ்ந்தார்.

திருநெல்வேலி திருச்சபையில் சத்தியநாதன் ஐயரின் ஊழியம் குறிப்பிடத்தக்கது ஆகும். 1785 ஆம் ஆண்டின் இறுதியில் சத்தியநாதன் பாளையங்கோட்டை வந்தபோது, பாளையங்கோட்டை, ஒத்தாரம்பட்டி என்னும் இரண்டு சபைகளையும், ஒரு சில சிறு கிராம சபைகளையும், அவைகளில் பணியாற்ற இரண்டொரு உபதேசிகரையும், ஒரு பள்ளிக்கூடத்தையும் கொண்டிருந்த திருநெல்வேலி திருச்சபையானது, 1805 ஆம் ஆண்டு அவர் திருநெல்வேலி ஊழியத்தினின்று விலகிய நாட்களுக்குள் 34 பெரிய சபைகளையும் அவற்றை சேர்ந்த 45 கிராம சபைகளையும், சுமார் 6000 கிறிஸ்தவர்களையும் அவர்களுக்கு போதிக்க 30 ஊழியர்களையும், 12 பள்ளிக்கூடங்களையும் உடைய பெரிய திருச்சபையாக வளர்ந்து பெருகினது. செல்வந்தருடைய குடும்பத்தில் பிறந்து வைராக்கியமான பக்தி உடையவராய் இருந்த போதிலும் ஆண்டவருடைய அன்பை அறிந்து கொண்டதால், அதை மற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற உன்னத அழைப்போடு செயல்பட்டவர். சாதிய வேறுபாடுகளை வெறுத்து அடித்தட்டு மக்களோடும் பழகி அவர்களும் கிறிஸ்துவின் அன்பை பெற்றுக்கொள்ள வழி அமைத்துக் கொடுத்தவர். திருநெல்வேலி கிறிஸ்தவம் இன்று வேரூன்றி வளர்ந்திருப்பதில் சத்தியநாதன் ஐயரின் பங்கு அளப்பரியது.



## 19 ஆம் நூற்றாண்டில்

# திருவிதாங்கூர் சமஸ்தானம்

ஜெ. ஜெனிஸ்,
கன்னியாகுமரி

இந்தியாவின் தென்மேற்கு கடைகோடியில் அமைந்த கண்ணை கவரும் எழிலும், சிறப்புமிக்க ஒரு நீண்ட நிலப்பரப்பே திருவிதாங்கூர் ஆகும். 18,153 சதுர கிலோ மீட்டர்களை உள்ளடக்கிய இந்த பிராந்தியம் வடக்கே கொச்சியையும், கோயம்புத்தூர் மாவட்டத்தையும், தெற்கே இந்திய பெருங்கடலையும், கிழக்கே மதுரை இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டத்தையும் மேற்கே அரபிக்கடலையும் எல்லைகளாக கொண்டு அமைந்திருந்தது. தற்போது கன்னியாகுமரி மாவட்டம் என அழைக்கப்படுவது இதன் தென்பகுதியாகும். இந்த சமுதாயத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி அதன் எல்லைகளை விரிவாக்கி, அதை ஒரு வலிமைமிக்க நாடாக மாற்றின பெருமை நவீன திருவிதாங்கூரின் சிற்பி மார்த்தாண்ட வர்மா (1729- 58. A. D) அவர்களையே சாரும்.

**சமுக- பொருளாதார காட்சியமைப்பு:**

பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் மனிதனுக்குள் பல வகுப்பு பிரிவுகளும் வருண அடிப்படையில் துவங்கியது. அதிலும் முக்கியமாக இரு பெரும் பிரிவுகளாய் உயர்சாதியினர், கீழ்சாதியினர் என காணப்பட்டனர். சுமார் 1050 சாதிபிரிவுகளும் இங்கே இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். பிராமணர், சத்திரியர், நாயர் ஆகியோர் உயர்சாதியினர் எனவும் ஈழவர், நாடார். கம்மாளர், மீனவர், புலயர், பறையர் என இவர்களெல்லாம் தாழ்த்தபட்டவர்கள் என்றும் கருதினர்.

**சமுதாயத்தில் தீண்டாமை :**

கடுமையான சாதி கட்டுப்பாடுகள் தீண்டாமை என்னும் கொடிய பழக்கத்திற்கு அடிகோலியது. தாழ்த்தப்பட்ட சாதியர் அருகில் செல்வதும், அவர்களை கண்ணால் காண்பதும், அவர்கள் பேசுவதை கேட்பதும் கூட தீட்டு என்னுமளவிற்கு தீண்டாமை வேர்விட்டு வளர்ந்திருத்தது. மனிதர்கள் மட்டுமல்ல பொருட்களும், தொழில்களும் கூட சுத்தம், அசுத்தம் என பிரிக்கபட்டிருந்தன. ஒரு நாடார் அல்லது ஈழவ இனத்தை சார்ந்த ஒருவர் பிராமணனிடமித்து 36அடி தூரத்திற்கப்பாலும், நாயரிடமிருந்து 12 அடி தூரத்திலுமே நிற்க முடியும். ஒரு புலயர் 96அடி தொலைவில் பிராமணனிடமிருந்தும், 60அடி நாயரிடமிருந்துமே நிற்க முடியும். இதனை தாண்டி இவரை பார்க்க நேரிட்ட உயர்சாதியர் தீட்டானவராக கருதப்படுவர். இங்கனம் தனது தீட்டினை மாற்றிக் கொள்ள ஆற்றிலோ, குளத்திலோ மூழ்கி நீராடி தன்னை தூய்மைபடுத்த வேண்டும்.

**பெண்களின் சமுகநிலை:**

ஒருநாள் மதுஅருந்திய நிலையில் வந்த நாயரை எதிர்கொண்டு வந்த பறையர் இனத்தை சார்ந்த மூதாட்டியை கோலினால் அடித்து உதைத்தனர். மேலும் பெண்கள் தங்கம், வெள்ளி, உயர்ந்த உலோகத்தால் செய்யப்பட்ட அணிகலன்கள் அணிய தடைகளும், உலோக பாத்திரங்கள் பயன்படுத்தவும், ஓடுபோட்ட வீடுகளில் வசிக்கவும் அனுமதி இல்லாமலே வாழ்ந்தனர். இடுப்பினில் தண்ணீர்குடம் சுமந்துசெல்லவோ, மேலாடை அணியவோ பெண்களுக்கு அனுமதியில்லை. பெண்கள் மீது பழுமிகுந்த நம்ப முடியாத கொடுமையான வெறுப்பை ஏற்படுத்தும் வரிகளும் விதிக்கப்பட்டிருந்தன. தலையில் வளரும் முடிக்கும், தனது மார்பகத்திற்கும், தாலிக்கும் வரி என பல வரிகள் செலுத்தப்படவேண்டும். பதினாறு வயதுமுதல் முப்பத்தி ஐந்து வரையுள்ள பெண்கள் செலுத்தும் மார்பக வரிக்கு எதிர்ப்பு தெரிவித்த சேர்த்தலை கிராமத்து பெண்மணி தனது மார்பகத்தை வெட்டி வரிவசூலிக்கும் அதிகாரியின் முன் எறிந்துவிட்டு தன் உயிரை மாய்த்துக் கொண்டாள். ஆம் இத்தகைய வரி செலுத்த முடியாத பெண்களை குனிய நிறுத்தி தலைமுடியில் உலக்கையை கட்டி முதுகில் பாறாகல்லை வைத்து விடுவார்களாம். எத்தனை கொடுமை என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

**வழிபாட்டு வாழ்க்கைகள் :**

இறைவழிபாடு செய்வதிலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அரசும், உயர்சாதியினரும் நிர்வகித்து வந்த கோவில்களில் கீழ்சாதியினர் வழிபாடு நடத்த அனுமதியில்லை. தங்கள் வழிபாட்டிற்கென தனியாக கோவில்கள் கட்ட வேண்டியிருந்தது. தெய்வங்களுக்கு செலுத்தும் காணிக்கைகளில் உயர்சாதியினர் நெய், பால் போன்ற பொருட்கள் படைப்பதால், கீழ்சாதியர் கள், சாராயம் போன்ற கீழ்த்தரமான பொருட்களையே படைக்க வேண்டும். மேலும் அடிமை வியாபாரமும் இங்குள்ள வாடிக்கையாக மாறி போயின. ஒரு அடிமை 3, 6, 9, 18 என்ற விலைக்கு விற்கப்பட்டார்கள். பெண்கள் ஓர் ஆணின் பாதி விலைக்கு விற்கப்பட்டனர். இவர்கள் உயர்ந்தோர் வாழுமிடத்திலிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் சேரிப்பகுதியிலே வாழ வேண்டும். தங்கள் எஜமான் வீட்டை 'மாளிகை' என்றும், தங்கள் வீட்டை 'மாடம்' என்றும் தான் அழைக்கவேண்டும். மக்களின் மூடநம்பிக்கை காரணமாக மலைகளில் பயங்கரமான வன தேவதை உண்டு என நம்பி மரங்களை வெட்ட அச்சபட்டனர், கிணற்றில் இறங்கும் போது விஷவாயு தாக்கி இறந்தால் பேய் அடித்து கொன்றதாகவும், வைசூரி போன்ற நோய்கள் வந்தால் அது கடவுளின் கோபம் என்றும் கருதி கடவுளின் அன்பை புரியாது வழிபாடுகளை அர்த்தமற்று மாற்றிவிட்டனர்.

**திருப்புமுனை காணும் திருவிதாங்கூர்:**

19-ம் நூற்றாண்டில் லண்டன் மிஷன் சங்க அருட் தொண்டர்களின் வருகை திருவிதாங்கூரின் திருப்புமுனையாய், அடிமைகளின் விடுதலையின் வெற்றி குரலாய் மாறி போனது. அருட்தொண்டர் அவர்களின் துணைவியரின் பணிகளும் முன்னேற்றத்திற்கானது என்பது குறிப்பிடதக்கது. திருமதி. ஜோகன்னா மீட், திருமதி. மார்த்தா மால்ற் போன்ற பலர் பெண்களிடம் உணவு, உடை, உறைவிடம் கொடுத்து பள்ளிக்கூடம் அமைத்து பெண்களை நாகரிகத்திலும், அறிவிலும் உயர்வு காண செய்தனர். அருட்தொண்டர்கள் தங்கள் மேலை நாட்டின் பெரும் ஆதரவால் கிறிஸ்துவை உலகில் எடுத்து கூறி, சபைகளை நிறுவி, கிறிஸ்துவின் மேல் வைக்கும் பற்றுறுதியையும், அவரால் தாம் செய்யும் நற்கிரியைகளையும் காண்பித்து கிறிஸ்துவின் பாதையில் வழிநடத்தினர். அருள் மிகுந்த ஆண்டவரின் கருணையும், அருள் தொண்டர்களின் நல்ல தகவுளையும் நாம் பின்பற்றி கிறிஸ்துவுக்கு நேராய் மக்களை நடத்துவோம்.



© Tinnevelly Christian Historical Society

# திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு

## பகுதி 6

திருமதி. ரெமினா சுஜித்





### சத்தியநாதனும் ஜெனிக்கேயும், 1791 முதல் 1797 வரை

சென்ற மாத பதிவுகளில் நாம் திருநெல்வேலி பகுதியில் கிறிஸ்தவம் எவ்வாறு வளர்ந்தது என்பதையும், குறிப்பாக கிளாரிந்தா அம்மையாரின் பங்களிப்பையும், ஸ்வார்ட்ஸ் மற்றும் அவரது உபதேசியார்களின் பணிகளையும் விரிவாக பார்த்தோம். இந்த மாத பதிப்பில்,அருள்திரு.சத்தியநாதன் மற்றும் ஜெனிக்கே (Jaenicke) என்ற மிஷனரியின் பயணங்களையும், அவரது பணிகளையும் தொடர்ந்து காண்போம்.

### திருநெல்வேலி திருச்சபையின் இரண்டாவது காலகட்டமும் சத்தியநாதனின் பயிற்சியும்

திருநெல்வேலியில் வளர்ந்து வருகின்ற திருச்சபையின் வளர்ச்சியில் இரண்டாவது குறிப்பிடத்தக்க காலகட்டம் 1791ல் தொடங்கியது. அப்போது சத்தியநாதன் குரு அருட்பொழிவு (ordination) பெற்ற பின்னர் பாளையங்கோட்டைக்குத் திரும்பி, திருநெல்வேலியில் சுமார் பதினான்கு ஆண்டுகள் குருவானவராக பணியாற்றினார். அதேசமயம், ஜெனிக்கே (Jaenicke) அவருடன் இணைந்து திருநெல்வேலியின் முதல் நிரந்தர, மிஷனரியாக பணியாற்றினார்.சத்தியநாதன் 1790 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் குரு அருட்பொழிவுக்கான சிறப்பு படிப்புக்காக ஸ்வார்ட்ஸால்(Schwartz) தஞ்சாவூருக்கு அழைக்கப்பட்டார். ஸ்வார்ட்ஸ் அவரை குறிப்பாக ரோமர் நிருபத்தை படிக்க வைத்தார், அதற்க்கான நோக்கம் என்னவென்றால் 'பவுல் எவ்வாறு கிறிஸ்தவ மார்க்கத்தின் முக்கிய கோட்பாடுகளை மக்களுக்கும் திருச்சபைக்கும் விளக்கி, நிரூபித்து, நடைமுறைக்கு பயன்படுத்தினார் என்பதைக் காட்டுவதற்காக'.

### சத்தியநாதனின் குரு அருட்பொழிவும் ஸ்வார்ட்ஸின் சாட்சியமும்

சத்தியநாதன் பாளையங்கோட்டையில் இல்லாத போது, தரங்கம்பாடியைச் சேர்ந்த உபதேசியார் சவரிராயன் அங்கு பொறுப்பேற்றார்.சத்தியநாதன் 1790 டிசம்பர் 26 அன்று தஞ்சாவூரில் ஸ்வார்ட்ஸ், ஜெனிக்கே மற்றும் கோலேஃப் (Kohlhoff) ஆகியோரால் குரு அருட்பொழிவு பெற்றார். ஸ்வார்ட்ஸ்

கிறிஸ்தவ அறிவு அபிவிருத்தி சங்கத்திற்கு (S.P.C.K) எழுதிய கடிதத்தில் அந்த நிகழ்வை விவரிக்கிறார்:'பாளையங்கோட்டை சபை வளர்ந்து வருவதாலும், தரங்கம்பாடியின் குருவானவர் ராயப்பன் உடல்நிலை மோசமாக இருப்பதால் அவர் அங்கு செல்ல முடியாத நிலையிலும், நாங்கள் பக்தியுள்ள உபதேசியார் சத்தியநாதனை பாளையங்கோட்டையிலிருந்து அழைத்து, அவருக்கும் மற்ற உபதேசியார்களுக்கும் சில முன்னேற்பாட்டு அறிவுரைகளை வழங்கி, அவருக்கு குரு அருட்பொழிவு வழங்கினோம்.'

### சத்தியநாதனின் குறைநலன்களும் சிறப்பு பண்புகளும்



சத்தியநாதனின் முழு நடத்தையும் அவரது இதயத்தின் நேர்மையை தெளிவாக வெளிப்படுத்துகிறது. அவரது பணிவான, சுயநலமற்ற, விசுவாசமுள்ள நடைமுறை எனக்கும் மற்றவர்களுக்கும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. இந்த நாட்டில் உள்ள உள்ளூர்வாசிகளில் அவருக்கு நிகரானவரை நான் பார்த்ததில்லை என்று உண்மையாகவே கூறலாம். கிறிஸ்துவின் மீதான அவரது அன்பும், அந்த அன்பு தனது நாட்டவருக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற அவரது விருப்பமும் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. பிரசங்கம் செய்வதில் அவரது திறமைகள் அனைவருக்கும் திருப்தியளிக்கின்றன. அவரது குரு அருட்பொழிவு நாளில் அவர் நிகழ்த்திய பிரசங்கமும், அந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு கொடுக்கப்பட்ட எழுத்துப்பூர்வ கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களும் திரு. ஜெனிக்கே மற்றும் திரு. கோலேஃப் ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டு உங்களுக்கு அனுப்பப்படும். ஏழைகள் மீது அவருக்குள்ள அன்பு அசாதாரணமானது; அவரது குறைந்த சம்பளத்தில் எப்படி வாழ்க்கை நடத்தி, ஏழைகளுக்கு இவ்வளவு உதவி செய்கிறார் என்பது எனக்கு பெரும்பாலும் புரியாத புதிராக உள்ளது. குழந்தைகளை கையாள்வதில் அவர் சிறந்தவர்; மேலும் தனது சொந்த வீட்டில் நல்ல முன்மாதிரியாக இருப்பது எப்படி என்பதை அவர் அறிந்துள்ளார் (இங்கே ஸ்வார்ட்ஸ் அவரது இரண்டு மகள்களின் பக்தியை உதாரணமாகக் கூறுகிறார்)."

### குரு அருட்பொழிவு நியமன விழா விவரங்கள்

டிசம்பர் 26 அன்று இந்த மதிப்புக்குரிய மனிதர் இந்திய குருவாக நியமிக்கப்பட்டார். முதல் பாடல் பாடப்பட்ட பிறகு, நான் 1 தீமோத்தேயு 4:16 இலிருந்து: 'உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு', என்ற தேவனுடைய வார்த்தையை அவரிடம் கூறினேன். பின்னர் அவருக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி அவரது ஊழியப்பணியை நிறைவேற்றுவதாக அவரிடமிருந்து வாக்குறுதி பெற்றேன். பின்னர் எங்களில் ஒவ்வொருவரும் அவரை ஆசீர்வதித்து, தேவனின் கிருபைக்கு ஒப்படைத்தோம். திரு. ஜெனிக்கே மற்றும் திரு. கோலேஃப் ஆகியோர் சிறிய அறிவுரையுடன் அவரை அணுகினர். இறுதியாக, நான் சபையினரை நோக்கி, நாங்கள் இப்போது அவரை இந்திய குருவாக நியமித்து, அவருக்கு எழுத்துப்பூர்வ அழைப்பையும் அறிவுரைகளையும் வழங்கப் போவதால், அவரை தங்களின் நியமிக்கப்பட்ட போதகராக ஏற்றுக்கொண்டு, அவருக்கு கீழ்ப்படிவதாக உறுதியளிப்பார்களா என்று கேட்டேன்? அவர்கள் அனைவரும் **'நாங்கள் செய்வோம்'** என்று பதிலளித்தனர்.

இதன் பேரில், நான் அவருக்கு அவரது ஊழிய அழைப்பையும் தேவனுடைய உபதேசங்களையும் வழங்கினேன்; குருவானவர் ராயப்பன் ஜெபத்தை நிறைவு செய்தார். பின்னர் சத்தியநாதன் எசேக்கியேல் 35:11 இலிருந்து பிரசங்கித்தார்; அவர் முடித்தவுடன், எங்களுடன் பரிசுத்த நற்கருணையைப் பெற்றார். இது எங்கள் அனைவருக்கும் மிகவும் மனமகிழ்ச்சியின் நாளாக இருந்தது. நான் என் தேவனை துதித்து பாடாமலிருப்பது எப்படி? எனக்கு அவர் காட்டின அவரது அனைத்து தகுதியற்ற இரக்கத்திற்காகவும் பணிவுடன் கர்த்தரின் நாமம் துதிக்கப்படுவதாக! அவர் நம்மையும் சபையையும் ஆசீர்வதித்து நமது சகோதரர் மூலமாக பல ஆத்துமாக்கள் கிறிஸ்துவிடம் கொண்டுவரப்படுவதற்கு கிருபையாக அருள்புரிவாராக! ஆமென்.' என்பதே.

### S.P.C.K அறிக்கையின் முக்கியத்துவம்

1791 ஆம் ஆண்டின் கிறிஸ்தவ அறிவு அபிவிருத்தி சங்க (S.P.C.K) அறிக்கையில், குரு அருட்பொழிவு பற்றிய சிறிய விவரத்துடன் பின்வரும் குறிப்பு, மிஷனரி கொள்கையின் மதிப்புமிக்க அறிக்கையாக சேர்க்கப்பட்டது:'எவ்வளவு காலம் மிஷனரிகளை பராமரிக்க சங்கத்திற்கு சக்தி இருக்கும்; இந்த உலகின் விவகாரங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் எவ்வளவு காலம் மிஷனுக்கு நிலைத்தன்மையை வழங்கும் என்பது நமது கணக்கீட்டிற்கு அப்பாற்பட்டது; ஆனால் நாம் இந்தியாவில் சுவிசேஷத்தை நிலைநிறுத்த விரும்பினால், போரின் இடர்பாடுகளுக்கு அப்பாலும், பேரரசுகளின் புரட்சிகளுக்கு அப்பாலும் பார்க்க வேண்டும்; நாம் காலத்தில் உள்ளூர்வாசிகளுக்கு அவர்களுக்கென்று சொந்தமான மற்றும் நமது ஆதரவைச் சார்ந்திராத திருச்சபையை வழங்க வேண்டும்; துணை பேராயர்களைக் கொண்டிருக்க வேண்டும், அவர்கள்

உதவி குருமார்களையும் குருமார்களையும் நியமித்து, அவர்களின் தாய் திருச்சபையுடனான அனைத்து தொடர்புகளும் அழிக்கப்பட்டாலும் கூட, உண்மையான அப்போஸ்தல உரிமையை [எபிஸ்கோபசி (Episcopacy)] உறுதிப்படுத்த வேண்டும்.'

எபிஸ்கோபசி (Episcopacy) என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்தது. இது கிறிஸ்தவ சபையில் காணப்படும் ஒரு ஆளுகை முறையாகும் இதில் 'பிஷப்' அல்லது 'மேற்பார்வையாளர்' என்ற தலைவர்கள் சபையை வழிநடத்துகிறார்கள்.கிறிஸ்தவத்தின் ஆரம்ப காலத்தில், அப்போஸ்தலர்கள் சபைகளை நிறுவினார்கள். அவர்களுக்குப் பின் பிஷப்புகள் தலைமைப் பொறுப்பை ஏற்றனர். இதனுடைய அமைப்பு: பிஷப்புகள், குருக்கள், டீகன்கள் என்ற படிநிலை அமைப்பு

### ஜெனிக்கேயின் நியமனமும் மிஷனரி பணியும்

இது 1814ல் கல்கத்தாவின் முதல் பேராயர் நியமனத்திற்கு 22 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்பதை நினைவில் கொள்ளலாம், அதேசமயம் மெட்ராஸின் முதல் பேராயர் 1835ல் நியமிக்கப்பட்டார்.ஜெனிக்கே கிறிஸ்தவ அறிவு அபிவிருத்தி சங்கத்தின் (S.P.C.K) மிஷனரியாக 1788 அக்டோபரில் தஞ்சாவூருக்கு வந்தார். அவர் தமிழை விரைவாகக் கற்றுக்கொண்டார், மேலும் 1790 ஜனவரியில் ஸ்வார்ட்ஸ் எழுதியதாவது, அவர் தமிழில் இயற்றிய பிரசங்கங்கள் என்னால் திருத்தப்பட்டன, ஆனால் குறுகிய காலத்தில் அவருக்கு அத்தகைய உதவி தேவைப்படாது என்று எதிர்பார்க்கப்பட்டது. அவர் எங்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதை முடிவு செய்வது கடினமாக இருந்தது, ஏனெனில் 1790 தொடக்கத்தில் அவர் ஒரு நண்பருக்கு எழுதியதாவது:'தரங்கம்பாடி மிஷன் விரிவானது மற்றும் கடினமானது. திரு. கெரிக்கே (மெட்ராஸில்) மீது தாங்க முடியாத சுமை உள்ளது. கடலூர் மிஷனரி இல்லாமல் உள்ளது. பாளையங்கோட்டை அப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ளது, அங்கு ஒரு மிஷனரி முற்றிலும் அவசியம், ஏனெனில் கிறிஸ்துவின் இராஜ்யம் பரவுவதற்கான சிறந்த வாய்ப்புகள் அங்கு காணப்படுகின்றன.'

### பாளையங்கோட்டையில் சவால்களும் வாய்ப்புகளும்

இறுதியாக 1791 ஜனவரியில் ஜெனிக்கே பாளையங்கோட்டைக்கு நியமிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. சத்தியநாதன், வழியில் இராமநாதபுரத்தைப் பார்வையிட்டு, அதே மாதம் கிறிஸ்தியன் என்ற உபதேசியாருடன் பாளையங்கோட்டைக்குச் சென்றார்; ஆனால் போர் காரணமாக, ஜெனிக்கே செப்டம்பர் வரை செல்லவில்லை. அவர் முதலில் இராமநாதபுரத்திற்குச் சென்று, அங்கு மிஷனின் பெரும் நண்பரான கர்னல் மார்டின்ஸை சந்தித்தார், அவர் முன்பு நவாபின் சேவையில் அதிகாரியாக இருந்தவர், இப்போது இராமநாதபுரம் ராஜாவின் உள்ளூர் படைப்பிரிவின் தலைமையில் இருந்தார். அவர் ஒரு ரோம கத்தோலிக்க திருச்சபையை சேர்ந்தவர்.

செப்டம்பர் 26 அன்று ஜெனிக்கே, கர்னல் மார்டின்ஸ் மற்றும் ஆங்கில அதிகாரியான திரு. ஹாமில்டன் ஆகியோருடன் மதுரைக்குப் புறப்பட்டு, செப்டம்பர் 27 அன்று பரமக்குடியை அடைந்தார். **ஜெனிக்கே கூறுகிறார்:** சில ஆண்டுகளுக்கு முன்பு, இது மிகவும் செழிப்பான இடமாகவும், மஸ்லின் நெசவாளர்களுக்காக பிரபலமாகவும் இருந்தது, ஆனால் இராமநாதபுரம் ராஜாவின் தற்போது பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சரின் அடக்குமுறை பல குடியிருப்பாளர்களை வேறு இடங்களில் குடியேற வைத்தது, மேலும் வணிகம் சரிவடைந்துள்ளது. இந்த நிலம் வெள்ளாளர் இன மக்கள் அல்லது மறவர் இன மக்களுக்கு சொந்தமானது, அல்லது வேறு விதமாகக் கூறினால், சிவகங்கை தலைவருக்கு சொந்தமானது. 1789 ஆம் ஆண்டின் போரின் போது சிவகங்கை கள்ளர்கள் இந்த இடத்தை மூன்று முறை கொள்ளையடித்தனர், இது அதன் தற்போதைய சரிவுக்கு பெரிதும் பங்களித்துள்ளது.'மதுரையில் இருந்தபோது அவர் இந்துக்களுடன் அதிகம் உரையாடினார், ஆங்கிலேயர்களுடன் இரண்டு முறை ஆராதனை நடத்தினார்; மூன்று குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்; மேலும் ஆங்கில வீரர்களுடன் தினமும் ஒரு மணி நேரம் சந்திப்பு நடத்தினார். பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு அக்டோபர் 12 அன்று மீண்டும் புறப்பட்டு, 16 அன்று பாளையங்கோட்டையை அடைந்தார்.

### மிஷனரி பயணங்களும் உள்ளூர் மக்களுடனான தொடர்புகளும்

அவரது நாட்குறிப்பிலிருந்து அவரது வாழ்க்கை வரலாற்றில் வெளியிடப்பட்ட பகுதிகளிலும், ஷ்வார்ட்ஸுக்கு அவர் எழுதிய கடிதங்களிலும், கிறிஸ்தவ அறிவு அபிவிருத்தி சங்கத்திற்கு (S.P.C.K) அவர் அளித்த அறிக்கைகளிலும், பாளையங்கோட்டையிலும் அவரது பதினொரு மாத பணி பற்றிய விரிவான விவரங்களைக் காணலாம்.'

அக்டோபர் 19, 1791 நமது சபையில் பலர் ரோம கத்தோலிக்க கிறிஸ்தவர்களுடன் உறவினர்களாக அல்லது தொடர்புடையவர்களாக இருப்பது பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது, ஏனெனில் பெரும்பாலும் நமது சபையில் பொருத்தமான நபர் இல்லாமல் இருப்பது, அல்லது அவர்களின் சூழ்நிலைகள் தங்கள் மகள்களுக்கு கணவர்களையோ அல்லது தங்கள் மகன்களுக்கு மனைவிகளையோ தேர்ந்தெடுக்க வழிவகுத்தது அதாவது சூழ்நிலை அவர்களை வற்புறுத்தியது என கூறலாம்.'

அக்டோபர் 25. நான் இந்திய குருமாருடன் பாளையங்கோட்டையிலிருந்து சுமார் ஏழு மைல் தொலைவில் உள்ள பற்பனாபபுரம் சென்றேன். இங்குள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் தாழ்ந்த சாதியினர், ஆனால் அவர்களின் நேர்மையான நேர்மை, புறாவைப் போன்ற எளிமை, தேவன் மீதும், ஒருவருக்கொருவர் மீதும் கொண்டுள்ள அன்பு, மற்றும் தேவனுடைய வார்த்தையின் மீதான அவர்களின் ஆர்வம் ஆகியவற்றின் மீது நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

### 26 ஆம் தேதி நான் அவர்களுக்கு ஒரு மூப்பரை நியமித்தேன்.

சந்தியாகு, அவர்கள் அனைவரும் மதிக்கும் ஒரு மனிதர்,

அவர் தனது பக்தியால் தன்னை வேறுபடுத்திக் காட்டியுள்ளார். நான் கிராமத்தின் தலைவருடனும் பேசினேன், அவர் திருச்சபைக்கு வழங்கிய நிலத்துண்டு மற்றும் கிணற்றுக்காக அவருக்கு நன்றி தெரிவித்தேன்; எதிர்காலத்திலும் எங்களுக்கு உதவுவதாக அவர் வாக்களித்தார்.

நவம்பர் 9 அன்று கர்னல் (கர்னல் கிளார்க், பாளையங்கோட்டை கோட்டையின் தளபதி) பல வியாபாரிகள் தங்களை அறிவுரை பெறுவதற்காக அவரிடம் வந்ததாகக் கூறினார். அவர்கள் என்னிடமும் வந்திருந்தனர், ஆனால் அவர்களை ஆராய்ந்தபோது, அவர்கள் ஏமாற்றுபவர்களும் கள்ள பணம் தயார்செய்பவர்கள் என்றும்,மேலும் அவர்கள் பலரை ஏமாற்றியிருப்பதையும் கண்டுபிடித்தேன்.

28 ஆம் தேதி நான் சுமார் மூன்று மணியளவில் நான் புவானியை (ஒட்டரமடத்திற்கு அருகில்) அடைந்து, இந்திய குருமார், சில கிறிஸ்தவர்கள் மற்றும் சில இந்துக்களுடன் உரையாடினேன். மறுநாள், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்களுடன் பேசிய பிறகு, நாங்கள் பாளையங்கோட்டை நோக்கி மூன்று மைல் தூரம் சென்று, கிறிஸ்தவர்களை ஆராதனைக்கு அழைத்திருந்த ஒரு ஓய்வு இல்லத்திற்குச் சென்றோம். அனைத்து கிறிஸ்தவர்களும் வந்தனர். அவர்கள் கிறிஸ்தவ நெறிமுறையில் வாழ்கிறார்கள் மற்றும் தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறார்கள் அதனால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அவர்களிடம் மற்ற எந்த பேராசையோ தீய குணங்களோ காணப்படவில்லை. நான் அந்த ஓய்வு இல்லத்தின் உரிமையாளரிடம் இந்த மகத்தான ஆராதனையை அடிக்கடி நடத்த அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டேன். அவரும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

**டிசம்பர் 1 ஆம் தேதி நான் வீடு திரும்பினேன்.**

### 1792–ல் ஞானஸ்நானங்களும் திருச்சபையின் வளர்ச்சியும்

ஜனவரி 6, 1792 - கடந்த ஆண்டில் நாற்பது இந்துக்கள் இங்கு ஞானஸ்நானம் பெற்றுள்ளனர், அவர்களில் நான் ஒன்பது பேருக்கு அறிவுரை மற்றும் போதகங்களை வழங்கி ஞானஸ்நானம் கொடுத்துள்ளேன், மூன்று சூத்திரர்கள் மற்றும் ஆறு வண்ணார்கள்... பன்னிரண்டு ரோம கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றனர், அவர்களில் ஆறு பேரை நான் ஏற்றுக்கொண்டுள்ளேன். பதிமூன்று குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளது. ஐம்பத்தைந்து பேர் பரிசுத்த நற்கருணையில் பங்கேற்றனர்.'

### மேற்கு மலைப்பகுதி ஆய்வு

ஜனவரி மாதம் ஜெனிக்கே மேற்கு பகுதியிலுள்ள மலைகளுக்கு பார்வையிட சென்றார் அவருடன் கலெக்டர் திரு. டோரின் என்பவரும் உடன் சென்றிருந்தார்.

ஜனவரி 8 நான் சில நண்பர்களுடன் களக்காட்டிற்குச் சென்றேன், இது நவாப் நிலத்திற்கும் திருவிதாங்கூருக்கும் இடையே எல்லையாக அமைந்துள்ள மலைத்தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இந்த மலைகள் மிகவும் மகத்துவமானவை மற்றும் பொதுவாக மிகவும் அழகானது.

20ஆம் தேதி நாங்கள் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். மலைத்தொடரின் அடிவாரத்தில் பெரியதும் சிறியதுமான பாறைகள் உள்ளன, அவற்றில் பல கிட்டத்தட்ட முழுமையான கோள வடிவத்தில் இருந்தன, சுமார் ஐம்பது அடி விட்டம் கொண்டவை. சமவெளி மலைகளில் இருந்து வரும் நீரோடைகளால் நன்கு நீர்ப்பாசனம் செய்யப்பட்டுள்ளது. பல பகுதிகளில் புல் ஏழு அடி உயரத்திற்கு வளர்ந்துள்ளது, மேலும் புலிகளால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதால் யாரும் இரவில் பயணம் செய்ய துணிவதில்லை, பகலில் கூட்டமாக மட்டுமே பயணிக்கின்றனர். இரண்டு மலைகளுக்கு இடையே உள்ள திறப்பின் வழியாகச் சென்ற பிறகு, நாங்கள் மீண்டும் அழகான நெல் வயல்கள் நிறைந்த சமவெளியில் நுழைந்தோம், சிறிய நீரோடைகள் அதை கடந்து சென்றன; சுற்றிலும் உயர்ந்த மலைகளும் அவற்றுக்கிடையே திறக்கும் இரண்டாவது கணவாயும் இருந்தன.

மலைகளுக்கு அருகில் உள்ள கிராமங்கள் பெரியவை, குடியிருப்பாளர்கள் செழிப்பாக உள்ளனர், வயல்கள் செழிப்பாக உள்ளன. இந்த மாவட்டத்தில் பல நெசவாளர்கள் உள்ளனர். இங்குள்ள மக்கள் நல்லவர்களாக காணப்பட்டனர். அவர்கள் கிறிஸ்தவ கோட்பாடுகளைக் கண்டு வியப்படைந்து, பலர் கண்ணீர் விடுவதை நான் கண்டேன்: போதுமான **கர்த்தருடைய பணியை செய்யும் ஊழியர்கள் இருக்கும் பட்சத்தில், கர்த்தர் நமக்கு இங்கு பெரிய ஆத்தும அறுவடையைத் தருவார்** என்று நம்புகிறேன்.

பதினொரு மணிக்கு, நாங்கள் மூவாயிரம் குடியிருப்பாளர்களைக் கொண்ட அம்பாசமுத்திரத்தை அடைந்தோம்; பொலையகார் என்னும் நபர் அதன் ஒரு மூலையில் உள்ள ஒரு சிறிய கோட்டையில் வசித்தார். வீடுகள் அனைத்தும் நல்லவையாக இருந்தன; ஓய்வு இல்லங்கள் அழகாகவும், வெட்டப்பட்ட கற்களால் கட்டப்பட்டவையாகவும் இருந்தன. அழகிய காட்சிகளை அனுபவிக்க நாங்கள் ஆற்றின் விளிம்பில் எங்கள் கூடாரங்களை அமைத்தோம், மற்றும் மதிய நேரத்தில், நகரத்திற்குள் நுழைந்து பல இந்துக்களுடன் பேசினோம்; அவர்கள் மிகவும் கவனமாக இருந்தனர்.

11ஆம் தேதி, விவரிக்க முடியாத அழகு கொண்ட நகரின் வழியாகச் சென்ற பிறகு, நாங்கள் பாபநாசம் என்ற இடத்தை அடைந்தோம். தொலைவில் மகத்தான நீர்வீழ்ச்சியைக் கண்டோம், அங்கு முழு ஆறும் மலைகளில் இருந்து இருநூறு அடிக்கும் மேல் கீழே விழுந்தது. ஆற்றின் கரைகள் நாற்பது அடி உயரமுள்ளவை. நாங்கள் இருந்த பக்கத்தில், படிக்கட்டுகள் மூலம் நீரின் விளிம்பிற்கு இறங்கும் வழி இருந்தது; கீழே பல ஓய்வு இல்லங்கள் இருந்தன. ஆற்றில் ஏராளமான கெண்டை மீன்கள் இருந்தன. பிராமணர்கள் அவற்றை கடவுள்களாகக் கருதி அரிசி கொடுத்து உணவளிப்பதால் யாரும் அவற்றைப் பிடிக்க முயற்சிக்கவில்லை. நாங்கள் அங்கு மீன் பிடித்ததால் பிராமணர்கள் எங்கள் குழுவினரிடம் மகிழ்ச்சியடையவில்லை, மேலும் எங்கள் மீது மரணத்தையும் துரதிர்ஷ்டத்தையும் அறிவித்தனர்.'

**பிப்ரவரியில், ஜெனிக்கே (Jaenike) ஒரு குழுவுடன் மலைகளுக்கு மற்றொரு குறுகிய பயணம் மேற்கொண்டார், அதன்போது,**

20ஆம் தேதி, நான் தென்காசி என்ற விசாலமான நகரத்திற்குச் சென்றேன். அங்கு ஐயாயிரம் குடியிருப்பாளர்கள் இருந்தனர். அங்கு ஒரு கடிகாரம் மற்றும் மணியுடன் கூடிய பெரிய கோவில் இருந்தது, இது இந்த நாட்டில் அரிதானது. சித்தாறு அதன் அருகே பாய்ந்தது. நாங்கள் அழகான ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தைப் பார்வையிட்டோம். ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் (இந்த இடத்தில் சுமார் நூறு பேர் உள்ளனர்) மற்றும் இந்துக்களுக்கும் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைப் பிரசங்கிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

**சத்தியநாதனின்பணிகள் (ஜனவரி–பிப்ரவரி 1794)**

**ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் குருவானவர் சத்தியநாதனின் பணி பற்றிய குறிப்புகள் இவை;**

ஜனவரி 31 அன்று, இந்திய ஊழியர்கள் மற்றும் சவரிமுத்து பயணத்திலிருந்து திரும்பினர்; அவர்கள் யாரும் ஒருபோதும் எந்த கிறிஸ்தவ ஊழியர்களும் செல்லாத இடங்களுக்குச் சென்றனர், மற்றும் எல்லா இடங்களிலும் இந்துக்களுடன் உரையாடல்களை நடத்தினர். சத்தியநாதன் நெசவாளர்களுடன் அதிகமாக கிறிஸ்துவப் பற்றி பேசினார், முக்கியமாக அவர்களுக்காகவே இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது, அவர்கள் முன்னதாகவே ஊழியர்கள் தங்களை தேவனுடைய கட்டளைகளில் வழிநடத்த விரும்புவதாக தெரிவித்திருந்தனர்; அவர்கள் சுமார் நூறு குடும்பங்கள் அல்லது முந்நூறு ஆத்மாக்கள். ஆனால் அந்த மக்கள் தங்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள், அது தன்னளவில் நியாயமற்றதாக இல்லாவிட்டாலும், நாங்கள் அவர்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. அவர்கள் உண்மையானவர்களாக இருந்தால், கர்த்தர் அவர்களுக்கு உதவுவார்.'

பிப்ரவரி 15 அன்று நான் சவரிமுத்துவை மணப்பாடு என்ற இடத்திற்கு அனுப்பினேன், பத்மநாதபுரம் என்ற இடத்தில் ஜெப வீட்டை கட்டுவதற்கான மரத்தைப் பெற, அதே நேரத்தில் கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்துவை அறியாத மக்களிடையே பணியாற்றுவதற்க்ககவும்.

பிப்ரவரி 25 அன்று நான் தென்காசியிலிருந்து பாளையம்கோட்டைக்கு திரும்பினேன். இந்திய குருமார் நான் இல்லாத நேரத்தில் மூன்று நபர்களுக்கு ஞானஸ்நானம் (baptism) கொடுத்திருந்தார், மேலும் நான் இருந்த இடங்களில் மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்க ஆர்வமாக இருந்ததைப் பற்றி அவரிடம் சொன்ன பிறகு, நான் சென்ற இடங்களைப் பார்வையிட பெரும் ஆசையை வெளிப்படுத்தினார். அதனால் அவற்றில் சிலவற்றைப் பார்வையிட்டு ஒவ்வொன்றிலும் சில நாட்கள் தங்க வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்தோம், அவர் 29ஆம் தேதி புறப்பட்டார்.'

**ஜெனிக்கேயின் பாளையங்கோட்டை பணிகள் (மார்ச் 1794)**

மார்ச் மாதத்தில், துரதிர்ஷ்டவசமாக, ஜெனிக்கேவின் உடல்நிலை சரியில்லாமல் போனது, அது அவரது வாழ்க்கையின் எஞ்சிய எட்டு ஆண்டுகளுக்கு அவரை முடக்கியது.

மார்ச் 1 நான் கடுமையான பித்த காய்ச்சலால் தாக்கப்பட்டேன், இது மலைகளின் நீர், குளிர், பனி மற்றும் மூடுபனியின் விளைவு என்பது தெரியவந்தது. எங்கள் குழுவில் மூன்று பேர், அவர்களில் டாக்டர் டோரின் (Dr. Torin), திரு. மார்ட்டின் (Mr. Martin) மற்றும் பாளையம்கோட்டையில் உள்ள கணக்காளர் (paymaster) ஆகியோர் அதே நோயால் தாக்கப்பட்டிருந்தனர். அதே நேரத்தில் அங்கிருந்த பல மக்கள் அதனால் இறந்தனர்; நான் மிகவும் கஷ்டப்பட்டேன், மற்றும் பல முறை மரணத்தின் விளிம்பில் இருந்தேன்.

25ஆம் தேதி நான் பதினேழு இந்துக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து ஒரு புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவரை ஏற்றுக்கொண்டேன்,

29ஆம் தேதி ஒரு தேவாலயத்தின் அடிக்கல் நாட்ட பத்மனாபபுரத்திற்குப் பயணம் செய்தேன்.'

ஏப்ரல் 2 : நான் மீண்டும் பத்மனாபபுரத்தில் இருந்தேன், மற்றும் கிறிஸ்தவர்களுடனும், ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடமும் மற்றும் இந்துக்களுடனும் பேசினேன். அவர்கள் அனைவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதி அளித்தனர், ஆனால் பத்மனாபபுரத்தில் கிறிஸ்துவைப் பற்றின போதனைகள் மற்றும் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர், ஏனெனில் அவர்களில் பெரும்பாலானோர் பல கால்நடைகளைக் வளர்ப்பவர்களாக இருந்தனர், மேலும் அவற்றைக் கவனித்துக்கொள்ள ஆட்கள் இருந்ததால், அவர்கள் பகல் நேரத்தில் கல்வி கற்றுக்கொள்ள முடியும் என்றும், காலை மற்றும் மாலை நேரங்களில் மட்டுமே கால்நடைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்கள். அவர்களின் கிராமத்தில் அவர்கள் கேட்டப்படி தேவ அறிவும் கல்வியும் கற்பிக்கப்படும் என்று நான் அவர்களுக்கு வாக்குறுதி அளித்தேன்.

உள்ளூர் ஊழியர் முப்பத்தி நான்கு நாட்கள் கழித்து 2ஆம் தேதி திரும்பினார். மூன்று வாரங்களுக்கு அவர் தென்காசி என்ற ஊரில் ஒரு ரோம கத்தோலிக்க கிறிஸ்தவரான ஒரு மனிதருடன் கல்குவாரியில் தங்கியிருந்தார், மற்றும் அங்கிருந்தபோது, அவரது நாட்குறிப்பு காட்டுவது போல், அவர் சும்மா இருக்கவில்லை. ஒவ்வொரு காலையிலும் அவர் அக்கம்பக்கத்தில் உள்ள ஏதாவது ஒரு கிராமத்திற்குச் சென்றார்; மேலும் அவர் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் அவரிடம் வெளிப்படுத்தி கேட்டுக்கொண்ட விருப்பத்தை அவரால் என்னிடம் போதுமான அளவு விவரிக்க முடியவில்லை, அவர்கள் அவரிடம் வேதாகமத்தை படிக்கவும் பிரசங்கிக்கவும் வேண்டினர். அவர் மகிழ்ச்சியால் நிரம்பியிருந்தார், மேலும் மீண்டும் அவர்களிடம் திரும்பிச் செல்ல விரும்பினார், ஆனால் அவர் பத்மனாபபுரத்தில் ஒரு ஆயத்த ஆராதனையை நடத்த வேண்டும் என்று நான் விரும்பினேன். மேற்கில் நமக்கு ஒரு பெரிய அறுவடை உள்ளது

என்று நான் நம்புகிறேன்.'

'பாளையங்கோட்டையில் உள்ள தேவாலயம் மிகவும் சிறியது, மேலும் நான் அதை விரிவுபடுத்த உத்தேசித்துள்ளேன், மேலும் அந்த நிலத்தில் இரண்டு தேவாலயங்களைக் கட்ட உள்ளேன், ஒன்று பத்பநாபபுரத்தில்.'

ஏப்ரல் 16 மருத்துவர் மற்றும் பிற நண்பர்கள் என் உடல்நலத்தை தேற்றுவதற்காக கடற்கரைக்குப் பயணம் செய்ய அறிவுறுத்தியதால், மற்றும் நானும் நீண்ட காலத்திற்கு முன்பு திரு. மெக்கெர்னை (Mr. Meckern) தூத்துக்குடியில் சந்திக்க வாக்குறுதி அளித்திருந்ததால், நான் அந்த இடத்திற்குப் புறப்பட்டேன், வழக்கம்போல் சாலையில் நற்செய்தியைப் பிரசங்கித்தேன்.

17ஆம் தேதி அங்கு தூத்துக்குடி வந்தடைதேன், இங்குள்ள டச்சு தொழிற்சாலையின் ஆளுநராக இருக்கும் திரு. மெக்கெர்னால் மிகுந்த அன்புடன் வரவேற்கப்பட்டேன். தொழிற்சாலை வலுவாக பாதுகாக்கப்பட்டுள்ளது, ஆனால் குறைவான வீடுகளைக் கொண்டுள்ளது.'

கிறிஸ்துவின் ராஜ்யத்தின் விரிவாக்கத்தை குறித்த பாரம் திரு. மெக்கெர்னின் இதயத்திற்கு மிக நெருக்கமாக உள்ளது, அவரால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட தமிழ் கிறிஸ்தவர்களுக்கு அவர்களின் உலக நலனுக்குத் தேவையான அனைத்திலும் அவர் உதவுகிறார்; ஆனால் அவர்களின் ஆத்துமாவோ சரியான ஆவிக்குரிய போஜனம் இன்றி பெலமற்று காணப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்களுக்கு ஒரு பிரசங்கம் வாசிக்கப்படுகிறது, ஆனால் கிறிஸ்துவையும் அவருடைய இரட்சிப்பையும் குறித்தான போதனைகள் இல்லை மற்றும் வீடு வீடாகச் சென்று அவர்களை சந்திப்பதும் இல்லை. மக்களுடன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நான் அங்குள்ள உபதேசியாருக்கு (catechist) சுட்டிக்காட்டினேன், மேலும் அவரை விடாமுயற்சியோடும், விசுவாசத்துடனும் இருக்க வலியுறுத்தினேன். எங்களால் முடிந்தவரையும் எங்களுக்கு அளித்த அனுமதித்தபடியும் நங்கள் இந்துக்களிடையே கிறிஸ்துவின் நற்செய்தியை கொண்டு செல்ல உழைத்தோம்; 17ஆம் தேதி மற்றும் அடுத்த இரண்டு நாட்களில் நான் காய்ச்சலால் தாக்கப்பட்டேன் மற்றும் என் கால்கள் வீங்கியிருந்தன.'

ஏப்ரல் 22 நான் ஜெர்மன் மற்றும் தமிழ் ஆகிய இரண்டிலும் பிரசங்கித்தேன். அவர்களிடம் அவர்களது மொழியில் பாடல்கள் இல்லை, மற்றும் அரசாங்கம் நமது பாடல்களை அவர்களுக்கு அளிக்க அங்கீகரிக்கவில்லை.'

ஏப்ரல் 24 மதியம் நான் இரண்டு மணி நேரம் கடுமையான இருமலால் தாக்கப்பட்டேன், அதைத் தொடர்ந்து இரவு நேரம் வரை காய்ச்சல் நீடித்தது. அதன் பிறகு 27ஆம் தேதி வரை தினமும் அது எனக்கு இருந்தது.

29ஆம் தேதி நான் டச்சு தேவாலயத்திற்குச் சென்றேன், அங்கு டோமினி (Dominy) ஒரு பிரசங்கத்தை வாசித்தார்; அதன் பிறகு நான் தமிழில் மிகவும் கவனமாகக் கேட்பவர்களுக்குப் பிரசங்கித்தேன். அடுத்த மூன்று நாட்களும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தேன் மற்றும் நான் வீங்கிய கால்களால் மிகவும் கஷ்டப்பட்டேன்.'

மே 4 - நான் மீன் பிடி மக்களின் தலைவரை சந்தித்தேன், அவரை டச்சுக்காரர்கள் இளவரசர் என்று அழைக்கிறார்கள், அவருடன் நீண்ட நேரம் உரையாடினேன். அவர் ஐரோப்பிய முறையில் வாழ்கிறார், தனது வேதாகமத்தை மிகவும் கவனமாக வாசிக்கிறார், மற்றும் அவரது அறிவு சிறப்பானது. அவர் மீன் பிடி மக்களுக்கு பயந்து இல்லையென்றால் உடனடியாக ரோமன் கத்தோலிக்கத்தை துறந்திருப்பார். பின்னர் நான் டோமினியால் நடத்தப்படும் டச்சு பள்ளியைப் பார்வையிட்டேன், அங்கு முப்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் படித்தனர்.

சில நாட்களுக்குப் பிறகு ஜெனிக்கே தூத்துக்குடியிலிருந்து மணப்பாடுக்குப் புறப்பட்டார், அவர் 11ஆம் தேதி மணப்பாடு வந்தடைந்தார்.

இந்த பதிவில், நாம் சத்தியநாதன் மற்றும் ஜெனிக்கே அவர்களின் உள்ளூர் ஊழியப் பயணங்களையும், அவர்கள் எவ்வாறு திருநெல்வேலி பகுதியில் கிறிஸ்தவத்தை பரப்பினார்கள் மற்றும் அதனால் அவர்கள் சந்தித்த துன்பங்கள் என்ன என்பதையும் பார்த்தோம். அவர்களின் இந்த ஊழிய பயணங்கள் மூலம், நாம் அந்தக் காலத்தில் இருந்த மக்களின் வாழ்க்கை முறை, மற்றும் அவர்களின் நம்பிக்கைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது. ஜெனிக்கே, குருவானவர் சத்தியானந்தன் மற்றும் சவரிமுத்து போன்ற இந்த ஊழியர்களின் அர்ப்பணிப்பு திருநெல்வேலி பகுதியில் கிறிஸ்தவம் வேரூன்றியதற்கு ஒரு ஊன்று கோலாக இருந்தது.

**கிறிஸ்துவின் நற்செய்தியை பிறர்க்கு அதுவும் ஆண்டவரைப் பற்றிய ஞானமும், அதிகமான ஊழியர்களும், போதிய வசதியும், அவர்களுக்கான ஊக்கமும் இல்லாத அந்த காலத்தில் அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்காக தங்களுடைய சிலுவையை சுமந்தார்கள், ஆம் அது ஒரு கடினமான பாதை பல உடல் நலக்குறைவும் கூட இருந்தது ஆனால் அவர்கள் சோராது கிறிஸ்துவை போதிப்பதை மட்டுமே குறிக்கோளாக வைத்து முன்சென்றனர். இதற்க்கு முக்கிய காரணம் அவர்களுக்கு இருந்த ஆத்தும பாரம்.**

இன்றைய சூழ்நிலையில் ஆண்டவர் நமக்கு போதுமான அளவு அனைத்து வசதிகளையும் தந்திருக்கிறார் ஆனால் அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக ஆண்டவரைப் போல் பாரப் படுகிறவர்களாய் இருக்கின்றோமா?. **'யாரோ செய்யட்டும் என்றல்ல நான் செய்வேன் என்ற பாரத்தோடு ஆண்டவரின் தரிசனத்தை நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம்'**

அடுத்த பதிவில், இவர்கள் சந்தித்த பல்வேறு துன்பங்களையும் அவர்கள் பெற்றுக்கொண்ட ஆத்தும அறுவடையையும் மற்றும் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து பார்ப்போம்.

**தொடரும்...**

**முனைவர்.கிறிஸ்டியன் கீலர்,**
திண்டுகல்




## சி.எஸ்.ஐ. ஹென்றி லிட்டில் நினைவாலயத்தின் வரலாறு

1874 ஆம் ஆண்டு வெஸ்லின் மெத்தடிஸ் மிஷனெரி சோஸைட்டி அமைப்பில் இருந்து வந்த அருள்திரு. ஹென்றி லிட்டில் கரூருக்கு திருத்தொண்டராக வருகை புரிந்தார். முதல் வழிபாடு கரூர் ஆலமர தெருவில் உள்ள சிற்றாலயத்தில் 5 பேரைக் கொண்டு நடத்தப்பட்டது.

1876-77 ஆம் ஆண்டு தென்னிந்தியா முழுவதும் கடுமையான வறட்சியும், கொடிய பஞ்சமும் தலை விரித்தாடியதில் 60 லட்சம் பேரும், குறிப்பாக கொங்கு மண்டலத்தில் 2 லட்சத்து 40 ஆயிரம் பேரும் உணவின்றி செத்து மடிந்தனர். இச்சூழலில் ஒரு நாள் ஹென்றி லிட்டில் கடை வீதி வழியாக நடந்து செல்கையில் பல மைல்கள் பசியோடு பயணம் செய்த சிறு பிள்ளைகள் வயிற்றுப் பசிக்காக கடையில் இருந்த சோளத்தை திருடியதால், அக்கடைக்காரர் அவர்களை தலையில் அடித்து காயப்படுத்தி சாக்கடையில் தள்ளி விட்டதைக் கண்டார். அதன் விளைவாக 1877 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் நாள் பெற்றோரை இழந்த மற்றும் ஆதரவற்ற 71 குழந்தைகளைக்கொண்டு ஒரு சிறுவர் இல்லத்தைத் தொடங்கினார்.


1876 ஆம் ஆண்டு கரூரில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தால், வாழ்வு தேடி வந்த பல்வேறு சாதி, சமயத்தினரை ஹென்றி லிட்டில் அவர்கள் தந்தை உள்ளமும், தாயின் பராமரிப்பும் கொண்டு எல்லோரையும் ஒருங்கிணைத்து கிறிஸ்து இயேசுவுக்குள் ஜாதிகளற்ற புதிய சமூகத்தை உருவாக்கினார். இப்படி சேர்ந்த குழந்தைகளின் எண்ணிக்கை காலப்போக்கில் 244 ஆக உயர்ந்தது. இக்குழந்தைகள் எதிர்வரும் காலத்தில் தன்னிறைவோடு வாழ வேண்டும் என்ற பெரும் எதிர் நோக்கோடு உருவாக்கப்பட்ட நிறுவனம் தான் கரூர் தொழிற்பயிற்சி பள்ளி. இத் தொழிற்பயிற்சிப் பள்ளி வீடுகளுக்கும், அலுவலகத்திற்கும் தேவையான தரமான மேசை, நாற்காலிகளும், நெய்யப்பட்ட நூல்களும் தயாரித்தது. இன்றைய தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் அமரும் இருக்கைகளும், இரண்டாம் உலகப்போரில் காயம்பட்ட வீரர்களின் காயங்களை கட்டுவதற்கான துணிகளும் இங்கு தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

1892 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் நாள் திருமதி. லிட்டில் அம்மையார் மற்றும் திரு. ஆலிவர் ஆகியோரால் கரூர் நகர ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு அதே ஆண்டில் ஆலயம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் நாள் நடைபெற்ற திருச்சி - தஞ்சை திருமண்டல அருட்பணி விழாவில் ஆலயத்தின் 125 ஆம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அவ்வழிபாட்டில் இதுவரை ‘கரூர் நகர ஆலயம்’ என அழைக்கப்பட்ட இவ்வாலயம் அருள்திரு ஹென்றி லிட்டில் அவர்களின் நினைவாக ‘C. S. I. ஹென்றி லிட்டில் நினைவாலயம்’ என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவ்வாலயத்தின் 125 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இச்சிலுவை, நினைவுச் சின்னமாக நிறுவப்பட்டது. இந்த “125 வது ஆண்டிற்கான நினைவுச் சிலுவைச் சின்னம்” மொழி, கலாச்சாரம், சாதியம், சமயக்கோட்பாடு மற்றும் பாலினம் கடந்து, இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு அருளப்பட்ட இறைவனுடைய நிபந்தனையற்ற அன்பையும், சமுக நீதியையும் நிலைநாட்ட அனைத்து மக்களையும் சிலுவையின் நிழலில் ஒருங்கிணைப்பதற்கான ஓர் உன்னத அழைப்பு.



**ஜே.பர்னபாஸ்**
சேலம் வரலாற்றுச் சங்கம்



# உலகப் புகழ்பெற்ற சேலம் இரும்பு

***வாளோடு முன்தோன்றிய மூத்த குடி :***

புறப் பொருள் வெண்பா மாலையில் கவி ஐயனாரிதனார் **“கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி - பழந்தமிழ்க் குடி”** என்று சொன்னது இன்று ஒரு மிகமுக்கியமான இலக்கியச் சான்று ஆனது. அறிய முடியாத மிக மிகப் பழங்காலத்திலேயே தமிழன் தன் கையில் ஒளிரும் வாளோடு தோன்றினான் என்பதே அது. இந்த இலக்கியச் சான்றை இன்றைய தொல்லியல் ஆய்வுகள் ஐயமற நிருபித்திருக்கிறது. **“தொல்காப்பியம்”** என்ற பழந்தமிழ் நூல் இரும்பு, எஃகு ஆகியவை அக்கால சமூகத்தில் உபயோகத்தில் இருந்ததைக் குறித்து பல இடங்களில் தெளிவாக குறிப்பிடுகிறது. இன்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதே அந்த ஒல்காப் புகழ் தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் பெருஞ் செல்வம். தொல்காப்பியத்திற்கு முன்பே இருந்த பல பழந்தமிழ் நூல்களிலும் இரும்பினாலான வாள், வேல், பற்றிய குறிப்புகள் இருந்திருக்கும்.

***தமிழ்நாட்டில் இரும்புக்கால நாகரீகம் (Iron age Civilization in Tamil Nadu)- சமீபத்திய கண்டறிதல்:***

உலகிலேயே முதன்முதலில் தமிழ்நாட்டில்தான் இரும்பின்பயன்பாடுதொடங்கியதுஎன்றும், 5000ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் தமிழ்நாடு தொல்லியல் துறை சமீபத்தில் அறிவித்திருக்கிறது.

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர் சிவகளையில் கிடைத்த மாதிரிகளை காலக் கணக்கிற்கு உட்படுத்தியதில் இது தெரிகிறது (Sivagalai sheds light on iron usage antiquity in Tamil landscape). அதாவது சுமார் 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பின் பயன்பாடு தமிழ் நிலப்பரப்பில் இருந்தது கண்டறியப்பட்டுள்ளதாக இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது (Iron age began on Tamil soil - placing the date 5300 years ago). தற்போது வெளிவந்துள்ள காலக் கணக்கின்படி உலக அளவில் இரும்பை உருக்கிப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் தமிழ்நாட்டில்தான் முதலில் இருந்திருக்கிறது என்று இரும்பின் தொன்மை என்ற ஆய்வறிக்கையை வெளியிட்டு பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் குறிப்பிட்டது (The Hindu -23rd Jan. 2025) இங்கே நமது கட்டுரைக்கு முக்கியமானது ஆகும்.

***திருக்குறளிலும், சங்க இலக்கியங்களிலும் :***

“கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்த வேல்” (குறள் :772), மற்றும் “கைவேல் களிற்றோடு போக்கி வருபவன் மெய் வேல்” பற்றியும் வான்புகழ் வள்ளுவர் கூறுவது தமிழரின் வீரத்தையும், ஆயுத பலத்தையும் காட்டுகிறது. மாங்குடி கிழார் என்ற புலவர் சொல்லும் புறப்பாடலில் (புறம் 26) “களன் அகற்றிய வியல் ஆங்கண் ஒளிர் இலைய எஃகு ஏந்தி” என்ற வரிகளில் இலைபோன்ற மெல்லிய கூர்மையான எஃகாலான வேலை இங்கே குறிப்பிடுகிறார். இரும்பிலிருந்து எஃகையும், அது உறுதியும், கூர்மையுமாக, மெல்லியதாகவும், விளங்கவும், அன்று அவர்கள் மேற்கொண்ட தொழில் நுட்பங்களையும் நாம் வியப்புடன் அறியமுடிகிறது. “ஒளிறு இலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்” (புறம் :88) என்று சேல நாட்டு அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் குறிப்பிடுவதிலிருந்து மழவர் தேசமான கொங்கு சேலநாட்டின் இரும்பு இங்கே மழவர் பெருமகன் கையில் நெடு வேலாக ஒளிர்கிறது என்பதை நாம் அறியமுடிகிறது.

***இரும்பு யுகமும், தமிழர்களும் :***

திராவிட மொழிஞாயிறு தேவநேய பாவாணர் சொல்வதான மாந்தன் தோன்றியது கடல் கொண்ட குமரிக் கண்டத்திலே என்றும், அவன் பேசிய மொழி தமிழே என்றும், நாம் ஏற்றுக் கொள்ள காரணங்கள் அநேகம் உண்டு. தந்தை பெரியார் சொல்வதான தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி என்பதையும், மாந்தன் காட்டுமிராண்டியாக தென்குமரி கண்டத்தில் இருந்தபோதே அவன் பேசியது தமிழே என்றும் அறியலாம்.

இந்திய துணைக் கண்டம் முழுவதையும் தமிழ் பேசும் நல்லுலகமாக உலகம் பார்த்த நாட்கள் அது. அப்பொழுது இமயம்தான் வடவேங்கடம். சிந்து நதியின் பாய்சலில் உருவான

ஆற்றங்கரை சிந்து சமவெளி நாகரீகமும் முந்தி இருந்த தமிழே எனலாம். பைபிளின் பழைய ஏற்பாட்டின் "எஸ்தர் என்பவளின் சரித்திரம்" என்ற புத்தகத்தின் முதல் வரியிலே இருக்கும் "சிந்து தேசம்" என்ற குறிப்பு (சிரேஷ்டர் சீகன்பால்க் மொழியாக்கம்) இந்த குறிப்பு பிற்காலங்களில் "இந்து தேசம்" என பெயர்க்கப்பட்டது. (பவர் மொழியாக்கம்). இந்த சிந்து தேசம் முழுவதும் வாழ்ந்தவர்கள் தொல்பழந் தமிழ் குடிதான்.

தொல் பழந் தமிழர்கள் சுமேரியர்களுடனும், எபிரேயர்களுடனும், எகுபதியர்களுடனும் வாணிப மற்றும் தொழில் தொடர்புகளில் ஈடுபட்டிருந்தனர். உலகெலாம் வெல்ல நினைத்து அப்போது சிந்து தேசம் மீது படையெடுத்து வந்த மாவீரன் அலெக்ஸ்சாண்டருக்கு அவரது பெருந் தோல்விக்கும், கலக்கத்திற்கும், பின்னர் புருசோத்தமன் என்ற போரஸ் மாமன்னன் கஞ்சமலை இரும்பினால் செய்யப்பட்ட துருப்பிடிக்காத, வலிமை மற்றும் கூர்மை, கொண்ட ஒளிரும் வாளை பரிசளித்து வியக்க வைத்த வரலாற்றுச் செய்தியையும் இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன். ( அருள்மிகு சித்தேசுவர சுவாமி திருக்கோயில் -கஞ்சமலை - சேலம் - புலவர் மா. கிருஷ்ணமூர்த்தி, திருக்கோயில் வெளியீடு -2000)

கிறிஸ்துவுக்கு முன்பு 5000 ஆண்டுகள் காலகட்டத்திலேயே எகுபதியர்களுடன் தொல் பழந் தமிழர்கள் பல்வேறு தொழில் துறைகளிலும், வாணிபத்திலும் நெருங்கியத் தொடர்பைக் கொண்டிருந்தனர். (கஞ்சமலை இரும்புக் கனி - ச. சரவணன், சேலம் வரலாற்றுச் சங்க சேகரிப்பு) இரும்பின் உபயோகத்தை கண்டறிந்திருந்த தமிழர்கள் தங்களின் தொழிநுட்பங்களை எகுபதியரிடம் பகிர்ந்து கொண்டனர். உலகிலேயே முதன்முதலில் இரும்பின் பயன்பாட்டை அறிந்து அதை உலகிற்கெல்லாம் சொல்லிக் கொடுத்தவர்கள் பழந்தமிழர்களே என்றால் அது மிகையாகாது.

### *"உருக்கு" என்பதிலிருந்து வந்த "நிலிலிமிகு":*

கஞ்சமலை இரும்புத் தாதுவை மிக பழமையான காலந்தொட்டேதமிழர்கள் பிரித்து உருக்கி, இரும்பு உபகரணங்கள் செய்துவந்தனர். இப்படி அவர்கள் தொழில் நுட்பத்துடன் உருவாக்கிய ஆயுதங்களுக்கும், உபகரணங்களுக்கும் "உருக்கு" என்று பெயர். இவைகளை மரக்கலங்கள் மூலமாக ஏற்றுமதி செய்து ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். ஐரோப்பிய மொழிகளில் வழங்கப்படும் "நிலிலிமிகு" என்ற சொல் "உருக்கு" என்ற தமிழ்ச் சொல்லிலிருந்தே வந்ததுதான் என்று சேலம் இரும்பு மனிதர் (Iron Man of Salem) என அழைக்கப்படும் திரு. ஹேத் ஜோசியா மார்செல் (Mr. Heath Josiah Marshall) சொல்கிறார். மேலும் அவர் சேலம் கஞ்சமலைத் தேனிரும்பைப் பற்றிச் சொல்லும்போது எகிப்து நாட்டில் பிரமீடுகளைக் கட்டும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கல்தச்சர்கள் பயன்படுத்திய உளி மற்றும் சுத்தியல்கள் இந்த கஞ்சமலைத் தேனிரும்பினால் செய்யப்பட்டவை என்றும் குறிப்பிடுகிறார்.

பல நூற்றாண்டுகளாக தமிழர்கள் இரும்பை உருக்கி உபகரணங்கள் செய்ய பயன்படுத்திய இரும்பு ஊது உலைகள் (Bloomery) அவர்கள் வசித்துவந்த வீடுகளுக்கு அருகிலேயே குடிசைகளை அமைக்க உபயோகப்படுத்திய அதே செம்மண்ணையும், மணலையும் கலந்து கோபுர வடிவத்தில் சுமார் 5 அடி உயரத்தில் கூம்பு போல கட்டப்பட்டு இருக்கும். இந்த ஊது உலைகள் அடிப்பாகம் 10 அடி சுற்றளவு கொண்டதாக இருக்கும். உலையின் உச்சியில் இருக்கும் வளையத்தின் வழியாக உருக்கவேண்டிய கனிமமும், எரிபொருளான கரியும் போடப்படும். கரி தொடர்ந்து எரிய வேண்டி ஆட்டுத் தோலினாலான பெரிய பைகள் (Bellows) அமைத்து, அவற்றை விட்டுவிட்டு இயக்குவதன் மூலம் காற்றை வேகத்துடன் உலைக்குள் செலுத்தி கனிமம் உருகிய பின்பு அது சேகரமாகும் மேடையை வெளியே எடுப்பார்கள். உருகிய நிலையில் இருக்கும் கனிமத்தை பலங்கொண்ட மட்டும் சம்மட்டியால் அடித்து, அதில் சேர்ந்திருக்கும் கனிம கசடுகளை நீக்கி, இதை மீண்டும் உருக்க இந்த மேடையை உலைக்குள் பொறுத்தி கனிமம் மேலும் உருக்கப்படும். உருகிய பின் கனிமத்தில் இருக்கும் சிலிக்காவும், அலுமினாவும், கரி எரிந்த சாம்பலுடன் மூலகசடாக பிரிந்ததும் வெளியேற்றப்படும். இப்பொழுது தனிப்பட்டு நிற்கும் உலோக இரும்பு பாளங்களாக (Ingots) செய்யப்படும். இவற்றிலிருந்தே வார்ப்பு இரும்பும் (Cast Iron), தேனிரும்பும் (Wrought Iron), இப்படியே இன்னும் சில வழிமுறைகளைப் பின்பற்றி உலகச் சிறப்புவாய்ந்த நிலிலி-மிகு என்ற உருக்கு எஃகும் (Steel) தயாரிக்கப்படுகிறது. இவை அனைத்தையும் தயாரிக்கும் முறைகளை பல நூற்றாண்டுகளாக தமிழர்கள் அறிந்திருந்தார்கள். (கஞ்சமலை இரும்புக் கனி - ச. சரவணன், சேலம் வரலாற்றுச் சங்க சேகரிப்பு)

சேலம் பகுதிகளில் இன்றைக்கு 200ஆண்டுகளுக்கு முன்பு இரும்பை உருக்கி அதிலிருந்து துருப்பிடிக்காத உறுதியான எஃகை உருவாக்கும் முறையை தனது கொங்கு நாட்டு சுற்றுப் பயணத்தின்போது தான் கண்டதாக ஆங்கிலேய எழுத்தாளர் பிரான்சிஸ் புக்கானன் (Mr. Francis Buchanan) தெரிவித்துள்ளார். மண்குடுவைக்குள் (Crucible) உருக்கி எடுக்கப்பட்ட இரும்புத் துண்டு (Ingot) போடப்படுகிறது. பின்னர் அதனுடன் ஆவாரம் செடியின் (Cassia auriculata) தண்டும் வெட்டிப் போடப்படுகிறது. பிறகு அந்த குடுவையின் வாய் களிமண்ணால் அடைக்கப்பட்டு, இதுபோன்ற பலகுடுவைகளும் ஊதுஉலையில் வைத்து, நான்கு மணி நேரத்திற்கு மேல் உருக்கப்படுகிறது. பிறகு குடுவைகள் உடைக்கப்பட்டு உருகிய உருக்கு பெறப்பட்டு, இது மீண்டும் இரண்டாவது முறையும் இதேபோல உருக்கப்படும்போது, எஃகு உருவாக்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (P. no. 97-Salem Cyclopedia -Busnagi Rajannan, 1992)

### *சேலம் மாவட்ட பகுதிகளில் இருந்த இரும்பை உருக்கும் சிறு தொழில் உலைக்கலன்கள் மற்றும் தொழிற்சாலைகள் :*

அந்த காலங்களில் இப்படிப்பட்ட இரும்பை உருக்கும் ஊதுஉலைகள் (Bloomery) அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், ஓமலூர், இராசிபுரம், சங்ககிரி, திருச்செங்கோடு, ஆகியபகுதிகளிலும்இருந்தது. பென்னாகரத்திற்கு தெற்காக அமைந்த பெரும்பாலை என்ற ஊரில் கோட்டை பகுதியில் கொல்லர்கள் (Blacksmiths) குடிசை தொழிலாக சேலம்

இரும்பிலிருந்து கத்திகளையும், கரண்டிகளையும், விவசாய உபகரணங்களையும் சிறந்த முறையில் தயாரித்துத் தந்தனர் (Produce iron spoons- knives and agricultural impliments of excellent workmanship)

பூலாம்பட்டியில் செயல்பட்டு வந்த கஞ்சமலை இரும்புத்தாதுவை எடுத்து உருக்கும் உருக்காலை (Port Novo Iron Company) க்காக ஓமலூருக்கு அருகே உள்ள சோழப்பாடி என்ற ஊரில் மரங்களை எரித்து கரி தயாரிக்கும் (Fuel for Smelting) இரண்டு ஆலைகள் இருந்தது. இதேபோல நெரிஞ்சிப் பேட்டையிலும், சாம்பள்ளியிலும், இதுபோன்ற ஆலைகள் இருந்தது.

நாமகிரிப்பேட்டையில் இரும்பை உருக்கும் தொழில் சிறப்பாக வளர்ந்திருந்தது. பல நெடுங்காலமாக இங்கு நடந்துவந்த இரும்பை உருக்கும் தொழிலின் சான்றாக கசடுகளும், இரும்பு உருக்கின சாம்பல்களும் ஊரின் மூலையில் மலைபோல் குவிந்து இருந்தாம். தொடர்ந்து சேலம் இரும்பை உருக்கும் தொழில் இந்த பகுதிகளில் நடந்து வந்தது. உயர்தர சேலம் தேனிரும்பு இங்கே உருவாக்கப்பட்டது. (p. nos. 211-213 & 234, 236 Gazetteer of the Salem District - Vol. -1- Part -2 - F. J. Richards, I. C. S., Madras, 1918)

சேலம் மாவட்டம் பூலாம்பட்டியிலே அன்று சேலம் இரும்பை உருக்கும் ஒரு சிறிய தொழிற்சாலை "Port Novo Iron Company" என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. முதலில் இது கடலூர் பரங்கிப்பேட்டை Port Novo வில் சேலம் இரும்பு மனிதர் ஹேத் ஜோசியா மார்செல் என்பவரால் துவங்கி நடத்தப்பட்ட East India Iron and Steel Company யின் சேலம் பகுதியின் ஒரு டிப்போ (Depot) வாகவே இருந்தது. பிறகு கஞ்சமலையிலிருந்து கொண்டுவரப்படும் இரும்புத் தாதுவை காவேரி ஆற்றின் வழியாக சோழப்பாடி முதலான பகுதிகளிலிருந்து கொண்டுவரப்படும் அடுப்புக்கரி முதலியவற்றால் உருக்கி இரும்புப் பாளங்கள் உருவாக்கப்பட்டது. இந்த கம்பெனி மூடப்பட்ட பிறகும் இந்த உலைக் கலன்கள், கட்டுமானங்கள் ஆகியவை நிலைத்திருந்தன. இந்த தொழிற்சாலை கொட்டிய கசடுகள் முதலான சாம்பல் கழிவுகள் இந்த காவேரிக் கரையில் கருப்பு திட்டுகளாக இருந்தன.

இந்த கம்பெனி மூடப்பட்ட பிறகு கோவையிலிருந்து Messrs. Stanes & Co. ஒரு புதிய தொழிற்சாலையை துவங்கினர். அதற்காக இரும்புத் தொழிலில் பாரம்பரியமாக ஈடுபட்டிருந்த கொங்கணாபுரத்தைச் சேர்ந்த பணியாளர்களை வேலைக்கு அமர்த்தி கஞ்சமலை இரும்பை உருக்கி எடுக்கும் பணியைத் துவங்கினர். ஆனாலும் இந்த இவர்களின் முயற்சி வெற்றி பெறவில்லை. (After the winding -up of the Port Novo Iron Company, an attempt was made to revive the industry by Messrs. Stanes & Co. Coimbatore, who brought expert people from Konganapuram to smelt the ore.) தொடர்ந்து கொங்கணாபுரத்தில் கஞ்சமலை இரும்பை ஊதுலை முறைப்படி உருக்கும் பணிகள் சிறிய அளவில் அங்குள்ளவர்கள் செய்து வந்ததும் இங்கே குறிப்பிடத்தக்கது. இதேபோல ஆத்தூர் வட்டம் செந்தாரப்பட்டியிலும் நடந்துவந்த குடிசை தொழிலான இரும்பு உருக்கும் பணிகள் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் முடிவிற்கு வந்தது. அதற்காக கட்டப்பட்டிருந்த உலை கோபுரங்களையும், கொட்டப்பட்ட கசடு கழிவுகளையும் இன்றும் காணமுடிகிறது என்று திரு. F. J. ரிச்சர்ட்ஸ் தனது "Gazetteer of the Salem District - Vol. 1- Part-2, Madras, 1918 (P. nos. 276 & 303)" என்ற ஆவண நூலில் தெரிவிக்கிறார். மேலும் இரும்பு உருக்கும் தொழில் (Major centres of Smelting and Steel making) அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் அரியகவுண்டன்பட்டி, நங்கவள்ளி, கொங்கணாபுரம், நாமகிரிபேட்டை, ராசிபுரம், சேந்தமங்கலம், சிங்கிபுரம், சோரகை, செந்தாரப்பட்டி, தம்மம்பட்டி, திருமலைப்பட்டி ஆகிய பகுதிகளில் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அயல்நாடுகளிலிருந்து இரும்பு இறக்குமதி செய்யப்பட்டது, போட்டிபோட முடியாத நிலைமைகளில் இந்த நமது இரும்புத் தொழில்கள் நசிவடைந்தன (Competition from imported steel led the indigenous industry to decline and disappear) (p. no. 97, Salem Cyclopedia -Busnagi Rajannan, 1992) இப்படியாக சேலம் இரும்பு தொடர்ந்து பழந்தமிழர் காலந்தொட்டு பல நூற்றாண்டுகளாக பயன்படுத்தப்பட்டு உலகெங்கும் அனுப்பப்பட்டும் வந்திருக்கிறது என்பதும், அதன் மேன்மைத் தொழில்கள் ஆங்கிலேயர்களின் வருகையால் நசிவடைந்ததையும், சாட்சியாக நிற்கும் சுவடுகளையும், வரலாற்றின் ஏடுகள் சொல்கின்றன.

### *சேலம் கஞ்சமலை முதலான இரும்புத்தாது நிறைந்த மலைகள் :*

"கஞ்சம்" என்ற சொல்லுக்கு தங்கம், இரும்பு, தாமரை, என மூன்று பொருள்கள் உண்டு. கஞ்சமலைப் பொன்னைக் கொண்டே பராந்தகச் சோழன் தில்லைக்கு பொன்கூரைவேய்ந்து அதனை பொன்னம்பலம் ஆக்கினான் என்றும் சொல்லப்படுகிறது. கஞ்சமலையில் ஓடும் மலைநதிக்கு "பொன்னாறு" என பெயர். இது திருமணிமுத்தாற்றில் கலக்கும் துணைநதி ஆகும். இந்த மலைநதியின் ஓட்டத்தில் பொன் பொடிகள் - அவைகளை சலித்தெடுத்து தங்கம் எடுத்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இதனையே கொங்குமண்டலச் சதகத்தில் (பக்கம்- 26, பாட்டு: 29) கவி கார்மேகம் "சிற்றம்பலத்தைப் பொன்னம்பலம் ஆகச் செயச் செறும்பொன் முற்றிலுந் தன்னகத்தே விளைவாவதை மொய்ம் பிறையுள் மற்றும் புகழக் கொடுத்ததன்றோ கொங்கு மண்டலமே" என்றும், "சிற்றம்பல முகடு கொங்கிற் கனகமணிந்த" என்ற வரிகளில் நம்பியாண்டார் நம்பி தனது திருவந்தாதியில் குறிப்பிடுவதும், கொங்கு நாட்டு கஞ்சமலை பொன்னே என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

"கஞ்சம்" என்றால் இரும்பு என்றும் ஒரு பொருள் உண்டு. அதன்படி இந்த மலையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இரும்புத்தாது மிகுந்துள்ளது. இந்த இரும்புத் தாதுவை அடிப்படையாகக் கொண்டே சேலம் இரும்பு உருக்காலை அமைக்கப்பட்டது. அது அரசியல் சூழ்ச்சிகளால் இன்னமும் உருக்காலை ஆக்கப்படாமல் உருட்டாலை ஆகவே தொடருகிறது. ஔவையாருக்கு அதியமான் பரிசளித்த சாவா மருந்தென்ற "கருநெல்லிக் கனி" இந்த கஞ்சமலையில் விளைந்ததே ஆகும். இரும்புச் சத்து மிகுந்த பூமி ஆதலால் இங்கே கருமைநிற

மூலிகைகள் அதிகம். கருநெல்லி, கருந்துளசி, கருநொச்சி, கருஊமத்தை, போன்ற மூலிகைகள் இங்கு அதிகம். இந்த கஞ்சமலைக் காட்டிற்கு கருங்காடு என்றே பெயரும் உண்டு. அரிய மூலிகைகள் நிறைந்த மலை, சித்தர்கள் மூலிகைத் தாவரங்களைத் தேடியலைந்த மலை என்று வரலாறு கூறும் இந்த மலையில் இன்றும் மூலிகைத் தேடல் தொடரும் கதைதான்.

சேர, சோழ, பாண்டிய, தொண்டை மண்டல, கொங்குமண்டல, நாடுகள் சேர்ந்த தமிழ்நாட்டின் கொங்கு நாட்டின் 24 நாடுகளில் இராசிபுரம் நாட்டின் கிளை நாடான சேலநாட்டிற்கும், பூவாணிய நாட்டிற்கும், பூந்துறை நாட்டின் கிளை நாடான பருத்திப்பள்ளி நாட்டிற்கும் பகுதிகளாக விளங்குவது கஞ்சமலை ஆகும். (அருள்மிகு சித்தேசுவர சுவாமி திருக்கோயில், கஞ்சமலை, சேலம் - புலவர் மா. கிருஷ்ணமூர்த்தி, திருக்கோயில் வெளியீடு- 2000)

சேரலம் (சேரர் + இல்லம்) என்ற பெயரே மருவி சேலம் ஆனது. சுற்றிலும் மலைகள் சூழ நடுவில் சேலம் சமவெளி. சுற்றி சுழன்று நிற்கும் மலைகளை நான்கு மலைத்தொடர்களாகப் பிரிக்கலாம். 1. பாலமலைத் தொடர், 2. மேல்மலைத் தொடர், 3. கீழ்மலைத் தொடர், 4. தாளமலைத் தொடர். கீழ்மலைத் தொடரில் சித்தேரி மலை, சிவனூற்று மலையும், கல்ராயன் மலைகளும், தாளமலைத் தொடரில் கொல்லிமலைத் தொடரின் தொடர்ச்சியாக பச்சமலை, போதமலை, மற்றும் ஜருகு மலை யும், தனிமலைகளாக சீத மலையும், சரித்திரப் புகழ்படைத்த கஞ்சமலையும் இரும்புக்கனி நிறைந்த மலைகள். இந்த இரும்புக்கனிகளில் காந்த சக்தி இருப்பதால் இந்த கஞ்சமலை அந்த காலத்தில் காந்த மலை என அழைக்கப்பட்டு அதுவே மருவி கஞ்சமலை என ஆனது என்றும் சொல்லப்படுகிறது. (கஞ்சமலை இரும்புக் கனி - ச. சரவணன், சேலம் வரலாற்றுச் சங்க சேகரிப்பு)

### சேலம் இரும்பின் பெருமை-வரலாற்றின் ஏடுகளிலிருந்தும், சின்னங்களிலிருந்தும்

பழந்தமிழர் காலத்திலிருந்தும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரைக்குமே சேலம் இரும்பில் செய்யப்பட்ட வெட்டுக் கத்திகள் (Chopping Knives) விவசாய உபகரணங்கள் மற்ற இரும்புச் சாமான்கள் நல்ல தரமுள்ளவைகளாகவும் துருப்பிடிக்காதவைகளுமாக இருந்தது உலோகவியல் ஆய்வாளர்களை ஆச்சரியப்பட வைத்தது. சோரகை பகுதியில் கண்டெடுக்கப்பட்ட துருப்பிடிக்காத சேலம் இரும்பினாலான வெட்டுக் கத்திகள், போதமலை முருகன் கோயிலில் இருக்கும் துருப்பிடிக்காத வேலாயுதங்கள் (Unrusting votive spears), இவைகள் சேலம் இரும்பின் பெருமையைச் சொல்லுகின்றன. (Salem Cyclopedia - Busnagi Rajannan, 1992)

சேலம் கலெக்டர் அலுவலகம் எதிரே உள்ள சேலம் பழைய ஆங்கிலேயர் கல்லறைத் தோட்டத்தில் உள்ள பல கல்லறைகளைச் சுற்றிலும் அமைக்கப்பட்ட இரும்பு கம்பி (Iron Grill Works) வேலைப்பாடுகள் - அவற்றில் பல சேலம் இரும்பில் செய்யப்பட்டவை. கள்வர்கள் களவாடியது போக, இன்று எஞ்சி நிற்கும் இந்த கம்பி வேலைப்பாடுகள் (Child: Guy A. Bloomfield & Mrs. Maud Fischer, monuments) வரலாற்றின் சாட்சிகளாக வெய்யில், மழை, பனி, ஆகியவற்றில் அடிபட்டும் துருபிடிக்காமல் சேலம் இரும்பின் பெருமையை பறை சாற்றுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சேலம் மத்திய சிறையில் (Salem Central Prison -1862) சிறைக் கைதிகளை வைத்து சேலம் இரும்பை உருக்கி உபகரணங்கள் செய்யும் இரும்பு உலோகப் பிரிவும் செயல்பட்டு வந்திருக்கிறது.

### இரும்புத் தொழில் வித்தகர் அருணாசல ஆசாரி (1790-1883):



கிழக்கிந்திய கம்பெனி இராணுவத்தில் அருணாசல ஆசாரியின் தந்தை அவில்தாராக பணிசெய்ததினால் ஆங்கிலேய கம்பெனி நிர்வாகத்தினர் மற்றும் ஆங்கிலேய துரைமார்கள் ஆகியோரிடம் அருணாசலம் நன்மதிப்பு பெற்றிருந்தார். தனது பரம்பரைத் தொழிலான உலோகத் தொழிலில் ஆர்வங்கொண்டிருந்த அருணாசலம் ஒரு இரும்பு எஃகு உருக்காலையை சேலம் டவுன் பகுதியில் வைத்திருந்தார். அதில் ஆங்கிலேயர்களுக்குத் தேவையான வேட்டைக் கத்திகளும், ஈட்டிகளும் சேலம் கஞ்சமலை இரும்பிலிருந்து செய்து தந்தார்.

1845ஆம் ஆண்டு சேலம் வந்திருந்த ஆங்கிலேய எழுத்தாளர் ஒருவர் சேலத்தில் அப்பொழுது நெசவுத் தொழிலுக்கு அடுத்ததாக இரும்பு எஃகு தொழில் சிறந்திருந்தது என்றும், அருணாசல ஆசாரியின் சேலம் டவுன் உருக்காலையில் சிறந்த ஈட்டிகள் செய்யப்பட்டு, அவைகள் இந்தியாவெங்கும் அனுப்பப்பட்டது என்றும், அவர் தனது குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். 1873ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற சர்வதேச பொருட்காட்சியில் தனது சேலம் உருக்காலையில் சேலம் இரும்பினால் தயாரிக்கப்பட்ட இரும்பு, எஃகு பொருட்களை காட்சிப்படுத்தினார். இதனைப் பார்வையிட்ட சக்ரவர்த்தினி விக்டோரியா மகாராணியார் சேலம் அருணாசல ஆசாரியைப் பாராட்டினார். அப்பொழுது மகாராணியாருக்கு சேலம் கஞ்சமலை இரும்பினால் செய்யப்பட்ட அழகான ஒரு ஜோடி மேசைக் கத்திகளை அருணாசல ஆசாரி பரிசளித்தார். அந்த மேசைக் கத்திகளை ஆப்பிள் பழங்களை நருக்குவதற்கும், தோல் சீவுவதற்கும், மகாராணியார் பயன்படுத்தி வந்தார் என்றும், ராணியாரின் மறைவிற்குப் பின்பு அவைகள் லண்டன் கோபுரத்தில்(Tower of London) உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அருணாசல ஆசாரியின் இரும்புத் தொழில் திறமையைப் பாராட்டி அப்பொழுது சேலம் ஜமீன்தாராக இருந்த ஜார்ஜ் ஃபிரெட்ரிக் ஃபிஷர் இப்பொழுது போஸ் மைதானம் என அழைக்கப்படும் பெரிய மைதானத்தை அருணாசல ஆசாரிக்கு கொடுத்தார். இப்பொழுது "அருணாசலம் தெரு" என்று அழைக்கப்படும் சேலம் பழைய பஸ் நிலையம் அருகே உள்ள

தெருவில்தான் அன்று அருணாசலம் ஆசாரி வாழ்ந்துவந்தார்.

இப்பொழுது அந்த தெருவின் அருகே உள்ள ஜலால் கட்டிடங்கள் இருக்கும் இடத்தில் பொதுமக்கள் நன்மைக்காக அருணாசல ஆசாரி ஒரு சத்திரத்தை கட்டி வைத்திருந்தார். இது அல்லாமல் அந்த பகுதியில் ஒரு பள்ளிக்கூடத்தையும் அவர் நடத்திவந்தார். தற்பொழுது அந்தப் பள்ளிக்கூடம் சேலம் மாநகராட்சியினரால் நடத்தப்பட்டுவருகிறது. (Salem Cyclopedia -Busnagi Rajannan, 1992)




***சேலத்தின் இரும்பு மனிதர் ஹேத் ஜோசியா மார்சல் (Mr. Heath Josiah Marshall 1790-1851- Iron Man of Salem):***

சேலம் மற்றும் கோவைப் பகுதிகளில் அன்று கிழக்கிந்திய கம்பெனியின் கடைசி வர்த்தகப் பிரதிநிதியாக இருந்தவர். இவர் சேலம் கஞ்சமலைப் பகுதிகளில் இரும்புத் தாது இருப்பதை முதன்முதலில் உலகறியச் செய்தவர் மட்டுமல்ல, இங்கே சேலத்தில் ஒரு இரும்பு உருக்காலை அமையவேண்டும் என்று முதன்முதலில் குரல் கொடுத்தவரும் இவரே. இதற்காக தனது அரசாங்க வேலைகளையும், பொறுப்புகளையும், உதறித் தள்ளிவிட்டு சேலம் இரும்பை ஆய்வு செய்யவும், இங்கு சேலத்தில் கஞ்சமலை இரும்பை வைத்து உருக்காலை அமைக்கப்படவும் பெருமுயற்சி எடுத்தார். இதற்காக இங்கிலாந்து சென்று ஆங்கில அரசின் அனுமதியைக் கோரி, தனது ஆய்வு முடிவுகளை அங்கே சமர்ப்பித்தும் வந்தார். இவருக்கு அப்பொழுது மெட்ராஸ் மாகாணத்தின் கவர்னராக இருந்த சர் தாமஸ் மன்றோ மிகவும் உதவி செய்தார்.

இருந்தாலும் இவரால் சேலத்தில் ஒரு இரும்பு உருக்காலையை அமைக்க முடியவில்லை. சேலத்திற்கு அருகில் கடலூர் பரங்கிப்பேட்டையில் 1830 ஆம் ஆண்டு ஒரு இரும்பு உருக்காலையை Porto Novo Iron Company என்ற பெயரில் துவக்கினார். இதுதான் இந்தியாவின் முதல் மற்றும் பழமையான இரும்பு தொழிற்சாலை. வெள்ளாறு ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்த இந்த தொழிற்சாலைக்கு வெள்ளாறு நீர்வழிப்பாதையை கொள்ளிடம் காவேரியுடன் ஒரு கால்வாய் வெட்டி இணைத்தார். கஞ்சமலை இரும்புத் தாதுவை காவேரி ஆற்றின் நீர்வழிப் பாதைகளில் பரிசல் மூலமாக கொண்டுவரும் திட்டத்தை அமல்படுத்தினார். இதற்காக பூலாம்பட்டியில் ஒரு பெரிய கிடங்கு ஒன்றையும் அமைத்திருந்தார். இந்த நீர்வழிப் பாதைகளில் மரக்கரியும், கஞ்சமலை இரும்புத் தாதுவும் அனுப்பப்பட்டுவந்தது.

மின்சாரமும், கல்கரியும் (Coal) இல்லாத அந்த காலத்தில் மரக்கரி முக்கியமான எரிபொருளானது. மற்றபடி ஊதுஉலையை இயக்குவதற்கும், பாரங்களைச் சுமப்பதற்கும், காளை மாடுகளை பயன்படுத்தினர்.

இந்த தொழிற்சாலை இந்தியா மற்றும் பிரிட்டன் நாடுகளின் இரும்புத் தேவையை ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு பூர்த்தி செய்தது. சென்னைத் துறைமுகம், சென்னை சென்ட்ரல், எழும்பூர் இரயில் நிலையம் ஆகிய கட்டுமானங்களுக்கு இரும்புத் தளவாடங்களை இந்த கம்பெனிதான் தந்தது. 1836ஆம் ஆண்டு போடப்பட்ட Red hill இருப்புப் பாதை தண்டவாளங்கள் இந்த கம்பெனியின் படைப்பே. பெருமளவு இரும்புத் தளவாடங்கள் இங்கிலாந்து தேசத்திற்கு ஏற்றுமதி ஆனது. சேலம் கஞ்சமலை இரும்புத் தாது மட்டுமல்லாது, தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், கர்நாடகத்திலிருந்தும் இரும்புத் தாது வரவழைக்கப்பட்டது.

எழும்பூர் (Egmore) இரயில் நிலையத்தின் பிரமாண்டமான இரும்புத் தளவாடங்களில் Porto Novo Iron Company என்ற வாசகத்தை பார்க்கும் போதெல்லாம் அது சேலம் இரும்பு என்பதை நாம் மறக்கக்கூடாது. கடலூர் ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தின் உள்ளே Porto Novo Iron Company யின் இறந்துபோன அதிகாரிகள் நினைவாக வைக்கப்பட்டுள்ள நினைவு வாசகம் பொறித்த Metel Plaquesகள் சேலம் இரும்பாலானவை.

லண்டன் மாநகரில் தேம்ஸ் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலங்களில் பரங்கிப்பேட்டை இரும்பு உருக்கு ஆலையில் தயாரிக்கப்பட்ட ஸ்டீல் கர்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன, அவற்றில் Porto Novo Iron Company என்ற வாசகம் உள்ளது. இவைகளெல்லாம் சேலம் கஞ்சமலை இரும்புதான் என்று இவைகளை பார்த்து ஆய்வு செய்த டாக்டர் J. இராஜா முகமது ஜெயினுலாப்தீன் (Dr. J. Rajamohamad Jainulabdeen) தெரிவித்துள்ளார். இதேபோல பிரிட்டனில் சேலம் கஞ்சமலை இரும்பினால் செய்யப்பட்ட இரண்டு பாலங்களில் ஒன்று "சேலம் பிரிட்ஜ்" (Salem Bridge) என பெயர் சூட்டப்பட்டுள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது. (தினகரன் :23-01-2016)

இங்கிலாந்தில் உள்ள Sheffield பகுதிக்கு மிகுதியான இரும்புத் தளவாடங்கள் அனுப்பப்பட்டது. மேலும் இங்கிலாந்தின் Menai suspension Bridge மற்றும் Brittania Bridge ஆகியவையும் Porto Novo Iron Company அனுப்பிய இரும்பு தளவாடங்கள் மூலமாகவே கட்டப்பட்டன. இவ்வளவு மகத்தான சாதனைகளை சாதித்த ஜோசியா மார்செல் இந்த இரும்புத் தொழிலில் நஷ்டமடைந்தார். 1849 ஆம் ஆண்டு இங்கிலாந்து திரும்பிய அவர் Sheffield என்ற ஊரில் ஏழ்மையடைந்து 1851 ஆம் ஆண்டு மரித்தார்.

***இந்திய தொழிற்கல்வியின் தந்தை J. M. லெக்லர் (Rev. J. M. Lechler -1804-1861) மற்றும் ஜெர்மானிய பொறியாளர் போசிங்கர் (Er. Boesinger) :***

இந்தியாவிலேயே முதன்முதலாக அன்றைய சேலம் நகரில் 1840ஆம் ஆண்டு தொழிற்கல்வி பயிற்சிப் பயிலகம் (Industrial School /School of Industry) ஒன்றை சங்கை J. M. லெக்லர் ஆரம்பித்தார். அதில் தச்சுவேலை, செங்கல் செய்தல், ஓடு செய்தல் (Tile making), தையல் வேலை, கட்டிட வேலை ஆகியவை கற்றுத் தரப்பட்டது. பிறகு இந்த பயிலகத்தில் லெக்லர் அவர்களின் முன்முயற்சியால் இரும்பு உலோகப் பிரிவு (Iron



Smithery) வும் சேர்க்கப்பட்டு, மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. இந்த இரும்பு உலோகப் பிரிவில் கஞ்சமலையிலிருந்து வெட்டி எடுத்து வரப்பட்ட இரும்புத் தாதுவில் இருந்து, இரும்பை பிரித்தெடுத்து உருக்கி, வார்ப்பு இரும்பு செய்யும் (Cast Iron) மிகவும் கடினமான வேலைகளும், பயிற்சிகளும் லெக்லர் அவர்களின் மேற்பார்வையில் நடந்துவந்தது.

இந்த இரும்பு உலோகப் பிரிவில் லெக்லர் அவர்களுக்கு உதவியாக சுவிட்சர்லாந்து பேசல் மிஷனிலிருந்து (Basel Mission) வந்த பொறியாளர்கள் போசிங்கர் (Er. Boesinger) மற்றும் கார்ல் இராம் (Er. Carl Rahm) ஆகியோரின் உலோகத் தொழில் பணிகள் மிகவும் சிறப்பானது.

சேலம் தொழிற்கல்வி பயிற்சிப் பயிலகத்திற்கு அருகிலேயே பொறியாளர் போசிங்கர் ஒரு இரும்பு உருக்காலை (Boesinger Forge) ஒன்றை அமைத்தார். இங்கு கலைப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் இதர இரும்புச் சாமான்களும் சேலம் கஞ்சமலை இரும்பிலிருந்து செய்யப்பட்டு விற்கப்பட்டது. வினோதமான இந்த உருக்காலையை அன்றைய சேலம் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து பார்த்துச் செல்வார்கள் என்று சங்கை T. C. விட்னி என்ற வரலாற்று ஆசிரியர் தனது "A Hundred Years of Salem Mission History, 1936" என்ற புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு லெக்லர் அவர்களும், அவரது உதவியாளர்களான ஜெர்மானிய பொறியாளர்களும், இரும்பு உலோகத் தொழில் துறையில் புதுமைகள் பலபடைத்தனர். தாங்கள் அறிந்த புதுமைகளை, தொழில்துறை நுட்பங்களை மாணவர்களுக்கு கற்றுத்தந்தனர். சிறந்த இரும்பு உலோகவியல் வல்லுனர்களை உருவாக்கிய தோடல்லாமல், இரும்பு உலோகத் தொழிலை (Iron Metellergy) ஒரு சிறந்த பயிற்சிப் பாடமாக அன்றே அறிமுகப் படுத்தினார்கள். சேலத்தில் இரும்பு உலோகத் தொழில் துறையில் முன்னோடிகளாகத் திகழ்ந்த இவர்களின் சிறப்பான முயற்சிகளையும், சாதனைகளையும் நாமும், வரும் சமுதாயமும் மறந்துவிடக்கூடாது.

***முடிவுரை :***

கஞ்சமலையிலும் அதன் தொடர்களாக குன்றுகளும் மலைகளுமாக உள்ள பல்வேறு மலைகள், சேலம் சமவெளியைச் சுற்றி அமைந்துள்ளன. இவைகளில் மேக்னடைட் (Magnetite) வகை இரும்புத் தாது நிறைந்துள்ளது. கஞ்சமலை, கோதுமலை, கல்ராயன், கொல்லி, மற்றும் தாளமலை போன்ற மலைகளில் அள்ள அள்ள குறையாத இரும்புக்கனி வளம் நிறைந்துள்ளது. மேக்னடைட் இரும்புத்தாது - பட்டை இரும்புக்கல் (Banded Magnetite Quartzite) என அழைக்கப்படுவது இந்த மலைகளில் குறிப்பாக கஞ்சமலையில் - மலை முழுவதுமே பட்டை இரும்புக் கல்லால் ஆனது என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதுவரைக்கும் யாரும் மலைகளை வெட்டி இந்த கனிவளங்களை எடுக்கவில்லை. எடுத்ததெல்லாம் மலைக் குன்றுகளைச் சுற்றிக் கொட்டிக்கிடக்கும் உதிரித் தாது (Floting Ores) வளத்தையே எடுத்துள்ளனர். இப்படி காலா காலமாக நம்மவர்களும், ஆங்கிலேயர்களும் எடுத்ததே பல இலட்சம் டன்கள் இருக்கும் என சொல்லப்படுகிறது. இந்த உதிரித் தாது பரிசல்களில் காவிரி நீர் பாதைகளில் கொள்ளிடம், வெள்ளாறு மற்றும் கால்வாய்கள் வழியாக Porto Novo Iron Company ஐ அடைந்ததை நாம் அறிவோம்.

இந்தவகை இரும்புத் தாதுவில் இரும்பின் அளவு 27% - 35% மட்டுமே உள்ளதாக சொல்லப்பட்டாலும், உள்ளிருக்கும் அந்த இரும்பு உயர் சிறப்பானது என சொல்லப்படுகிறது. துருப்பிடிக்காத உறுதியான இந்த இருப்பினால், உயர்தர இராணுவ தளவாடங்கள் செய்யவும், மற்ற முக்கியமான தேவைகளுக்குமான இரும்பு இதுவாகவும் இருக்கும் என உலோகவியலாளர்கள் கருதுகின்றனர்.

இதனை தாதுவிலிருந்து பிரித்தெடுத்து அந்த இரும்புக் கனியை எடுப்பதற்கு செலவீனமும், பிரிப்பு முறைகளும் அதிகமும் சிக்கலுமானதாகக் கருதப்படுகிறது. அயல்நாடுகளில் தொழில் நுட்பத்துடன் எடுத்து இதனை உருவாக்க ஆர்வம் கொண்டோர் உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டே சேலம் மலைக் குன்றுகளில் குவிந்துகிடக்கும் இரும்புக்கனியை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்திடவே சென்னை - சேலம் எட்டு வழி பசுமைச் சாலைத் திட்டமே வந்ததையும் நாம் அறிவோம்.

நமது நல்வளத்தை நாமே வெட்டி எடுத்து உயர்தொழில்நுட்பத்துடன் அவற்றை பல்தொழில்களின் பயன்பாட்டிற்கும் வழங்கவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருக்கும் இந்நாட்களில் இது சாதனை செய்தால் நாடு முன்னேறும், தொழில் நுட்பங்களுடன் தொழிற்துறையும், அறிவியல் ஆய்வுகளும் பெருகும், பொறியியல் படித்த நம் தமிழ்நாட்டு இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறுவார்கள்.

பல ஆண்டுகளின் தொடர் போராட்டங்களின், அரசியல் முன்னெடுப்புகளின், பயனாய் வந்த சேலம் இரும்பாலை (Salem Steel Plant) கனிவளத்தை வெட்டி எடுக்காமல், உருக்காலை செயல்பாட்டில் கைவைக்காமல், இன்னமும் உருட்டாலையாகத் தொடர்வது ஏனோ? உலகப் புகழ் பெற்ற உயர்தனி சேலம் இரும்புக்கனியை நாம் முழுமையாக பயன்படுத்தி பயனடையும் நாள் எந்நாளோ ?

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே ! - இயந்திரங்கள் வகுத்திடுவீரே!" என்று முழங்கிய மகாகவி பாரதியின் கட்டளையை சிரமேற்கொண்டு செயல்படுவோம். "உலோகங்களின் அரசன்" எனப் போற்றப்படும் இரும்பின் தொன்மையும் பயன்பாடும் இன்று தமிழனின் பெருமை.



முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர், திருநெல்வேலி



# ஓடிப் போனவன்...

தொடர்
7


**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத இதழில் இரண்டு ஆண்டுகளாக எழுதி புகழ்பெற்ற ஏமி கார்மைக்கேல் நாவலை எழுதிய நாவலாசிரியர் முனைவர் த ஜான்சி பால்ராஜ் அவர்கள் எழுதும் புதிய தொடர்....**

சுந்தர் மகிழ்ச்சிப் பொங்க தாவீது சுந்தரானந்தன் என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்றான். அதன் பிறகு அவனது எண்ணங்களிலும் செயல்களிலும் அதுவரையில்லாத அளவில் மாற்றங்கள் ஏற்பட்டது. தன்னை எல்லோரும் தாவீது என்று அழைப்பதையே மிகவும் விரும்பினான். நண்பர்களோடு இணைந்து முன்னிலும் அதிகமாகச் சமய பணிகளில் ஈடுபட்டான். கிறிஸ்தவச் சமய எதிர்ப்பாளர்களுக்குத் தக்க முறையில் சரியான விளக்கத்தை அளிக்குமளவு விவிலிய அறிவில் தேறினான். அவனிடமிருந்த தன்னலமற்ற பேரன்பும், விவேகமும் அவனை மற்றவர்களிலும் அறிவுடையவனாகவும், மிகுந்த தெளிவு பெற்றவனாகவும் காண்பித்தது. எந்நிலையிலும் எல்லோரிடமும் தாழ்மையாகவும், பெருந்தன்மையுடனும் நடந்து கொண்டான்.

அவனது புத்திக் கூர்மையையும் தெய்வப் பற்றையும் சுவார்ட்ஸ் மற்றும் கோலாப் போன்றோர் பாராட்டி மென்மேலும் ஊக்குவித்தனர். அருகமைந்திருந்த கிராமங்களுக்குச் சென்று சமயக் கருத்துக்களை எடுத்துரைத்தான். எதிர்ப்பவர்களும் அவனது அன்பினால் கட்டுண்டு அவனது நண்பர்களாகினர். ஒருபோதும் சமயப்பணியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டதில்லை அவன். புன்னகைத் ததும்பும் முகமும், உண்மையான அன்பும் அவன் வயதை ஒத்த இளைஞர்களை பெருமளவில் அவன்பால் ஈர்த்தது.

எழுத வாசிக்க அறிந்திராத அந்தக் காலகட்டத்தில் அவனது வேத வாசிப்பும், அதற்கான விளக்கத்தை எடுத்தியம்பும் தோரணையும் கேட்போரைத் தன்பக்கம் ஈர்க்கும் தன்மையைப் பெற்றிருந்தது. பிறமதக் கொள்கைகளையும், பிரதிவாதங்களில் இருக்கும் நியாயங்களையும் மதிக்கும் மனவலிமையையும் இயல்பாகவே பெற்றிருந்தான்.

ஒருமுறை மண்டேலடி என்ற கிராமத்தில் சமயப்பணிக்காகத் தொடர்ந்து சில வாரங்கள் அவனும் நண்பனான ஜெயபிரகாசும் சென்றிருந்தனர். அழகிய அந்தக் கிராமம் விக்கிரகங்களால் நிறைந்திருந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் மிகவும் ஏழ்மை நிலைமையிலிருந்தனர். எங்கு திரும்பினாலும் சிறுசிறு மண் குடிசைகளும், வழிபாட்டிற்கான மண் குதிரைகள், மண் பீடங்கள், மண்ணாலும், கற்களாலும் ஆன சிலைகளுமாய் நிறைந்திருந்தன. இவர்கள் இருவரும் அந்தச் சிறிய ஊரின் ஏதாவதொரு மூலையில் நின்று பாடல்களைப்பாடி விவிலியத்திலுள்ள கதைகளையும், சம்பவங்களையும் எடுத்துக்கூறி தங்களை வேடிக்கைப் பார்க்க வருபவர்களோடு உரையாடுவர். நாளடைவில் அம்மக்கள் தங்களது இன்ப துன்பங்களையும் அவர்களிடம் பகிர்ந்து கொள்ளுமளவில் நட்புக்குள்ளாகி, இவர்களது வரவை எதிர்நோக்கி காத்திருக்கத் தொடங்கினர்.



இந்நிலையில் அந்த ஊர் தலைவனுக்கு இவர்களது வருகைப் பிடிக்கவில்லை. வேறொரு தெய்வத்தைப் பற்றி மக்களிடம் பேசுவதும், அவர்களும் இவர்களிடம் சென்று கதைக் கேட்பதும் நல்லதல்ல என்று நினைத்தான். எப்படியாவது இவர்களை இனி ஊருக்குள் விடக் கூடாதென்று தீர்மானித்து தனது நண்பர்களோடு அவர்களது வருகைக்காக காத்திருந்தான்.

சுந்தர் தனது நண்பனுடன் வழக்கம் போல் ஊரின் மேல் முனையிலிருந்த அரசமரத்தின் அடியில் நின்று பாடல்களைப் பாடத் தொடங்கினான். சற்று நேரத்தில் மக்கள் வந்து கூடினர். அவ்வூர் மக்கள் தங்களது குழந்தைகளையும் இடுப்பிலும் தோளிலுமாகச் சுமந்து கொண்டு வந்து நின்று கவனித்தனர். சற்றுநேரத்தில் அவர்களை விலக்கிக் கொண்டு ஊர்த்தலைவன் முன்னால் வந்து நின்றான். கைகளைக் குறுக்கே கட்டிக்கொண்டு ஏளனமாக அவர்களைப் பார்த்தான். பாடிக்கொண்டிருந்த பாடல்

முடியும்வரை காத்திருந்துவிட்டு, முடிந்ததும். . . , 'எல்லாரும் ஒக்காருங்க' என்று கையசைத்தான். நின்று கொண்டிருந்தவர்கள் கலக்கத்தோடு ஒருவரையொருவர் பார்த்தபடியே அமர்ந்தனர்.

'எத்துன நாளா இது இங்க நடக்குடே. . . பாட்டா படிக்கிறீய. . . ஏசு ஏசுன்னு சொல்லுறிய. . . அவரு எங்க இருந்து வந்தவரு?' என்று கேட்டுக்கொண்டே சுந்தரை நோக்கி நடந்தான். அவனுடன் வந்தவர்களில் ஒருவன், 'சின்னையா, இவந்தான் அன்னைக்குச் சொன்னான். . . . மூஞ்சில ஒரு கன்னத்துல யாராச்சும் அடிச்சிட்டா நாம திரும்பி அவன அடிக்கப்படாதாம். அடுத்தாப்லருக்க கன்னத்தையும் காட்டி அடிச்சுக்கன்னு சொல்லனுமாம். . . . அஹ. . . ஹ. . . ஹா. . .' என்று சிரித்தான்.

ஊர்தலைவன் "அப்டியா சொன்னிய. . . ?" என்று கேட்டுக் கொண்டே ஓங்கி சுந்தரை கன்னத்தில் அறைந்தான். அவன் வலியைத் தாங்கிக் கொண்டு எதுவும் பேசாமல் அப்படியே நின்றிருந்தான். 'அட ஆமாங்டா. . . சரியா தான் சொல்லியிருக்கானுவ பையனுவ' என்றான் ஏளனமாகச் சிரித்துக் கொண்டே.

'வேற என்னமெல்லாம் சொன்னானுவ. . . ?' என்று நண்பர்களைப் பார்த்தான் அவன். வெற்றிலையை 'சவக் சவக்' என்று சவித்தபடியே 'ரெண்டு உடுதுணி வச்சிருந்தமுன்னா வக்காதவனுக்கு ஒன்ன குடுத்து ஒதவனுமுன்னான்' என்ற சிமிட்டு சிரிப்போடு சுந்தர் பக்கமாய் திரும்பினான்.

சுந்தரையும், ஜெயபிரகாசையும் தவிர அந்தக் கூட்டத்தில் ஆண்களில் வேறு யாரும் சட்டை அணியவில்லை. ஊர்த்தலைவன் மட்டும் மேலாடையாக வெள்ளைத் துணியைச் சுற்றி மூடியிருந்தான். 'அப்பிடின்னா. . . நீயும் மேல ஒன்னு கீழ ஒன்னுன்னு ரெண்டு போட்டிருக்கியே. . ஒன்ன எனக்குத் தந்திரு' என்று மேல் சட்டையை அவிழ்க்க கையை நீட்டினான்.

'கொஞ்சம் பொறுங்கள் நானே தருகிறேன்' என்ற சுந்தர், அதைக் கழற்றி 'வைத்துக் கொள்ளுங்கள். .' என்றான் பவ்யமாக. அதை வாங்கி வெற்றிலை வாயனிடம் நீட்டினான் ஊர்த்தலைவன். அவன் அதைத் தனது தோளில் போட்டுக் கொண்டான்.

'யாம்டே இப்டி எங்கூருக்குள்ளலாம் வாரிய? இங்காருங்க. . எனிமே இங்கன யாரும் வந்தியன்னா எல்லாத்தையும் உருவிட்டு உட்ருவேன் ஆமா. . . . இங்கிருந்து ஓடுதியலா இல்லியா' என்றான். ஊர்மக்கள் எல்லோரும் கிளம்பினர். சுந்தர் கண்கலங்கி, 'பிதாவே இவர்களுக்கு மன்னியும்' என்று முழங்காலில் நின்றவாறு ஜெபித்துவிட்டு எழுந்தான். இருவரும் வீடு திரும்பினர். இருவரும் சுவார்ட்சிடம் வந்து நடந்தவற்றைக் கூறினர்.

சுந்தரின் வலப்பக்க கன்னம் வீங்கி கண்ணும் கலங்கியிருந்தது. எல்லோரும் அவனைச் சுற்றி சொல்வதறியாது அமைதியாய் நின்றனர். சுவார்ட்ஸ் அவனிடம் 'கர்தருக்காகப் பாடு அனுபவிக்கும் உன்னை மென் மேலும் ஆசீர்வதிப்பார். . . நீ ஓய்வெடு. அந்த மோசமான ஜனங்களுக்காக நாம் ஜெபிப்போம்' என்றார். 'அவர்களை மிகவும் மோசமானவர்கள் என்று சொல்லிவிட முடியாது ஐயா. கொஞ்சம் இரக்க குணமும் உடையவர்கள் தான்' என்றான் சோகத்தோடு தன் மீது அன்பு பொழிந்து நின்ற அனைவரையும் பார்த்தபடியே. . . .

'என்ன சொல்கிறாய். . ?' என்பதைப்போல எல்லோருடைய பார்வையும் அவன் மீது குவிந்தது. 'ஆமாம். அந்த ஊர்த் தலைவன் இருக்கானே. . அவன் என்னை ஒரு கன்னத்தில் அறைந்ததோடு விட்டு விட்டான்; அடுத்தக் கன்னத்திலும் அடிக்க நினைக்கவில்லையே! அடுத்ததாக என் மேல் சட்டைக்குப் பதில், கீழ்ச் சட்டையை அவிழ்த்துக் கேட்டிருந்தால். . . . !??' என்று அப்பாவியாய் முகபாவம் காட்டிக் கேட்க. . . அந்தச் சோகத்திலும் அனைவரது முகமும் அவனது நகைச்சுவை உணர்வாலான பேச்சினால் புன்னகைத்து ததும்பியது.

தனது வேதனை வேறு எவரையும் தாக்கி விடக் கூடாதென்ற அவனது பண்பு. . . உண்மையான பற்றுறுதி, கடவுளுக்காக அவன் கொண்ட வைராக்கியம் அனைத்தையும் அனைவரும் உணர்ந்து அவனை மெச்சினர். சுந்தர் மீதான நம்பிக்கையும் நல்மதிப்பும் சுவாட்சுக்கும் கோலாப் ஐயருக்கும் பெருகியது. இருவரும் அவனைப்பற்றின பெருமிதத்தால் மகிழ்ந்தனர்.

சுவாட்சுக்கு வெகுநாளாய் மனத்திற்குள் இருந்த தேடலுக்கான ஒரு விடை சுந்தராக தெரிந்து கொண்டிருந்தது. அப்போது. திருநெல்வேலியில் குளோரிந்தாள் ஏற்படுத்தி நடத்திவந்த சபைகள் பெருகிக்கொண்டிருந்தன. அவற்றை நடத்துவதற்கான சமயப்பணியாளர்கள் போதாமையாக இருந்தது. சுவாட்ஸ் அனுப்பி வைத்திருந்த சமயப்பணியாளரான சத்தியநாதன் என்பவருடன் இணைந்து சமயப்பணியாற்ற மற்றொரு ஊழியரை அனுப்ப சொல்லி அங்கிருந்த ஜெனிக்கே ஐயர் தொடர்ந்து கடிதம்மூலம் கேட்டுக்கொண்டேயிருந்தார். இதனால் யாரை அனுப்புவது? என்ற தேடல் தான் வெகுநாட்களாக அவருக்குள் ஓடிக்கொண்டிருந்தது.

இப்போது திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த இந்தத் தாவீது சுந்தரானந்தன் மிகப் பொருத்தமானவனாக தெரிந்தான் அவருக்கு. அவனால் சத்தியநாதனுக்கு உற்ற உதவியாளனாக விளங்க முடியும் என்று உறுதியாக நம்ப முடிந்தது. எப்போது திருநெல்வேலியைப் பற்றின விசயங்களைத் தான் பேசினாலும் சுந்தரின் முகம் பிரகாசிப்பதை கவனித்திருக்கிறார். அவனது சொந்த ஜென்ம பூமியல்லவா அது. . ! உடனடியாகத் தனது விருப்பத்தை அவனிடம் தெரிவிக்கும் சரியான தருணம் இதுதான் என்பதை உணர்ந்தார்.

அவனை அழைத்து தனது விருப்பத்தை அவனிடம் சொல்லச் சொல்ல தாவீது சுந்தரானந்தன் பழம் நழுவி தேனில் விழுந்து. . . பின் அது நழுவி தன் வாயில் விழுந்ததைப் போலவே உணர்ந்தான். . . மிதந்தான் கனவுலகில். . . !!

**மலர்வான் சுந்தர்**

# அம்பாசமுத்திரம் திருச்சபையின் ஆரம்பம்



ஜா.ஜான் ஞானராஜ்
திருநெல்வேலி

திருநெல்வேலியில் இருந்து பாபநாசம் செல்லும் சாலையில் சுமார் 38 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள நகரம் அம்பாசமுத்திரம். பழங்காலத்தில் அம்பாசமுத்திரம் இளங்கோய்க்குடி என்று அழைக்கப்பட்டது.

1790 இல் நவாப் ஆட்சி கால நிறைவில் ஆங்கிலேயர் ஆட்சி மறைமுகமாக செயல்படுத்தப்பட்ட வேளையில் ஆங்கிலேயரால் திருநெல்வேலி மாவட்டம் உருவாக்கப்பட்ட போது பல தாலுகாக்களாக பிரிக்கப்பட்டன. அப்போது பிரமதேசம் தாலுகாவில் அம்பாசமுத்திரம் இருந்து வந்தது. அம்பாசமுத்திரம் பாபநாசம் மற்றும் தென்காசி செல்லும் நெடுஞ்சாலையில் இருந்தமையால் பிரமதேசம் தாலுகாவுக்கான சிறைச்சாலை போன்ற சில அலுவலகங்கள் அம்பாசமுத்திரத்திலேயே இயங்கி வந்தது. பிரம்மதேசம் தாலுகாவின் தலைமையிடமாக 1861 இல் அம்பாசமுத்திரம் மாறியது. அது முதல் அம்பாசமுத்திரம் தாலுகா என்று அழைக்கப்பட்டது. 1878 இல் அம்பாசமுத்திரம் பாஸ்டரேட் உருவாக்கப்பட்டு முதல் குருவானவராக கனம். தேவப்பிரசாதம் ஐயரவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

### ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்தி பணியும் கல்விப் பணியும்

அம்பாசமுத்திரத்திற்கு அருகாமையில் இருந்த கிராமங்களான கல்லிடைக்குறிச்சி, சிவந்திபுரம், கருத்தப்பிள்ளையூர், கல்யாணிபுரம் ஆகியவற்றில் 1828 இல் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் சி.எம்.எஸ். மிஷன் திருச்சபைகள் உருவாயின. அந்நேரம் அம்பாசமுத்திரத்திற்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஆனால் அங்குள்ளவர்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் பிரமதேசம் தாலுகாவில் நெடுஞ்சாலையின் முக்கிய சந்திப்பாக இருந்த அம்பாசமுத்திரத்தில் பள்ளிக்கூடம் தொடங்கி, கல்வி பணியை ஆரம்பிப்பது அதன் மூலமாக நற்செய்தி பணியை செய்யலாம் என்று எண்ணிய ரேனியஸ் ஐயரவர்கள் 1832 ஆண்டு தொடக்கத்தில் சி.எம்.எஸ். தொடக்கப் பள்ளியை அம்பாசமுத்திரத்தில் தொடங்கினார்கள். 1831 மிஷன் குறிப்புகளில் அம்பாசமுத்திரத்தில் தொடக்கப்பள்ளி தொடங்கப்பட்டதற்கான குறிப்புகள் இல்லை. ஆனால் 08.08.1832 இல் அம்பாசமுத்திரத்திற்கு வருகை தந்த ரேனியஸ் ஐயரவர்கள் தமது மிஷன் நாட்குறிப்பில் 'அம்பாசமுத்திரம் சென்றேன், அங்கு நமக்கு நல்லதொரு பள்ளி உள்ளது ஆனால் இன்று வரை சபை இல்லை' என குறிப்பிடுகிறார். ஆதலால் பள்ளி 1832 தொடக்கத்தில் தொடங்கப்பட்டிருக்க வேண்டும். அம்பாசமுத்திரத்தில் தொடங்கப்பட்ட பள்ளி நற்செய்திப் பணிக்கு நல்ல பலனை தந்தது. தொடக்கப்பள்ளி தொடங்கப்பட்ட பின் 1832 இல் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் அம்பாசமுத்திரத்தில் சபை உருவானது.

### தொடக்க கால சபையாரின் பின் மாற்றம்

1833 ஆம் ஆண்டின் தமது மிஷன் நாட்குறிப்புகளில் அம்பாசமுத்திரத்தின் தொடக்க கால சபை உறுப்பினரான நல்லக்கண் என்ற வாலிபனைக் குறித்து ரேனியஸ் ஐயரவர்கள் குறிப்பிடுகிறார். 'அந்த வாலிபன் தமது உறவினர்கள் மெச்ச வேண்டும், உறவினர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் நெற்றியில் திருநீறு பூச ஆரம்பித்ததையும் அவனிடம் அஞ்ஞானக் கிரியைகள் காணப்படத் தொடங்கியதையும் அதன் காரணமாக அவன் சபை நீக்கம் செய்யப்பட்டான்' என்ற தகவலையும், ஆனாலும் அந்த நல்லக்கண் என்ற வாலிபன் மீண்டும் கர்த்தருடைய பிள்ளையாக மனம் திரும்பி வரவேண்டும் என்பதற்காக தொடர்ந்து பத்து நாட்கள் அவனுக்காக பாரத்தோடு தாம் ஜெபித்ததையும் தமது நாட்குறிப்பில் குறிப்பிடும் ரேனியஸ் ஐயரவர்கள் அவன் உத்தம மனஸ்தாபத்துடன் துயரம் மிகுந்தவனாக கெட்ட குமாரனைப் போல மனம் திரும்பியதாகவும் அதில் குறிப்பிடுகிறார். 29.04.1833 அன்று அம்பாசமுத்திரத்திற்கு ரேனியஸ் வந்த போது அவரைச் சந்தித்த அந்த வாலிபன் தன்னைப் பிரிப்பிராண்டி வகுப்பில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார். அந்த வாலிபனை அந்த வகுப்பில் சேர்த்துக் கொள்ள ரேனியஸ் அனுமதிக்கவில்லை. அவனிடம் அம்பாசமுத்திரத்திற்கு அருகில் உள்ள கல்லிடைக்குறிச்சி சபையில் போய் சேருங்கள் எனக் கூறிவிட்டார்.

### கனம். பெற்றிட் ஐயரவர்கள் காலத்தில்

1835 ஜூன் மாதத்தில் சி.எம்.எஸ். மிஷனில் இருந்து பாளையங்கோட்டை தலைமை கண்காணிப்பு மிஷனரி பொறுப்பில் இருந்து ரேனியஸ் ஐயரவர்கள் நீக்கப்பட்டு பெற்றிட் ஐயரவர்கள் நியமிக்கப்பட்டார். 1847 வரை பெற்றிட் அந்த பொறுப்பில் இருந்தார். கனம். பெற்றிட், கனம். சார்ஜென்ட், தேவசகாயம் ஆகியோர் சி.எம்.எஸ். மிஷன் சபைகளை கண்காணித்து வருவதற்கான மிஷன் சுற்றுப்பயணத்தை தொடங்கினர். அம்மூவரும் 24.07.1835 இல் அம்பாசமுத்திரத்திற்கு வருகை தந்தனர் அவர்கள் அனுப்பிய மிஷன் ரிப்போர்ட்டில் (CMR) 'அம்பாசமுத்திரத்தில் நமக்கு ஒரு பள்ளிக்கூடம் மாத்திரம் உள்ளது' என குறிப்பிட்டுள்ளனர்.

அதே நேரத்தில் அம்பாசமுத்திரத்திற்கு அருகில் உள்ள சபைகளை சந்தித்த அவர்கள் அந்த கிராமங்களில் உள்ள சபை குடும்பங்களின் விபரங்களை குறிப்பிட்டுள்ளனர். ஆதலால் அக்காலத்தில் அம்பாசமுத்திரம் சபையார் முழுவதுமாக பின்வாங்கிப் போன நிலைமையை அந்த குறிப்பு மூலம் அறிந்து கொள்கிறோம்.

### மிஷனரியின் நற்செய்திப் பணி

1849 முதல் 1850 வரை டோனாவூர் வட்டார தலைமை மிஷனரியாக கனம். ரேனியஸ் அய்யரவர்களின் மகன் கனம். சார்லஸ் ரேனியஸ் ஐயரவர்கள் பணி செய்து வந்தார்கள். அவரும் டோனாவூர் உபதேசிமார்களும் இணைந்து கல்லிடைக்குறிச்சி - அம்பாசமுத்திரம் வரை நற்செய்திப் பணியைச் செய்து வந்தார்கள். அதே காலகட்டத்தில் 1850 இல் கனம். சார்ல்ஸ் ரேனியஸ் ஐயரவர்களால் கல்லிடைக்குறிச்சி திருச்சபை புதுப்பிக்கப்பட்டது. கனம். சார்ல்ஸ் ரேனியஸ் ஐயரவர்கள் 1850 இல் அம்பாசமுத்திரத்திற்கு வந்து தாம் நற்செய்திப் பணி செய்தது குறித்து தமது மிஷன் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்நேரம் அம்பாசமுத்திரத்தில் சபை உருவாகவில்லை.

### புதுப்பிக்கப்பட்ட அம்பாசமுத்திரம் திருச்சபை

1864 இல் அம்பாசமுத்திரத்தில் மிஷன் தொடக்கப்பள்ளி கட்டிடம் கட்டப்பட்ட செய்தியும், 1865 இல் கனம். வில்லியம் ஐயரவர்களால் 10 சென்ட் நிலம் தேவாலயம் கட்டப்படுவதற்காக வாங்கப்பட்டது குறித்த குறிப்புகளும் உள்ளன. 1864 அல்லது 1865 இல் அம்பாசமுத்திரம் சபை புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பருவம் கடந்த ஞானஸ்நான பதிவேட்டின்படி 15.11.1868 இல் ஒருவரும் 16.11.1868 இல் ஒருவரும் அம்பாசமுத்திரத்தில் பருவம் கடந்த ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். தொடக்கத்தில் நல்லூர் வட்டார குருவானவரும் அதன் பின்னர் புலவனூர் மற்றும் சீவலசமுத்திரத்தில் தங்கி பணி செய்த குருமாரும் புதுப்பிக்கப்பட்ட அம்பாசமுத்திரம் திருச்சபையாருக்கு ஞானஸ்நானம் கொடுத்துள்ளனர். முதன்முதலாக அம்பாசமுத்திரத்தில் தேவாலயம் கனம். தாமஸ் ஸ்பிராட் ஐயரவர்களால் 21.11.1871 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த பிரதிஷ்டையின் போது அம்பாசமுத்திரத்தை அடுத்த சாட்டுப்பத்து கிராமத்தைச் சார்ந்த 11 பேர் அம்பாசமுத்திரம் தேவாலயத்தில் பருவம் கடந்த ஞானஸ்நானம் பெற்றனர். அந்த ஞானஸ்நான பதிவேட்டில் ஞானஸ்நானம் பெற்றவர்களின் பெயர்களை பதிவு செய்யும்போது அம்பாசமுத்திரம் தேவாலயப் பிரதிஷ்டை என்பதையும் கனம். தாமஸ் ஸ்பிராட் ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

### அம்பாசமுத்திரம் புதிய சேகரம்

அம்பாசமுத்திரத்திலும் சுற்று வட்டாரத்திலும் இருந்த திருச்சபைகளை கண்காணிக்கும் பொருட்டு அம்பாசமுத்திரத்தை தனி சேகரமாக்கி அம்பாசமுத்திரத்தில் தங்கி பணி செய்யும்படியாக 1878 இல் குருவானவர்கள் நியமிக்கப்பட்டனர். முதல் குருவானவராக கனம். தேவப்பிரசாதம் ஐயரவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அம்பாசமுத்திரத்தில் தங்கி பணி செய்யும் குருவானவர் நியமிக்கப்பட்டவுடன் அம்பாசமுத்திரத்தில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் இருந்த கல்லிடைக்குறிச்சி திருச்சபை டோனாவூர் வட்டாரத்தில் இருந்து பிரிக்கப்பட்டு நல்லூர் வட்டாரம் அம்பாசமுத்திரம் சேகரத்தில் சேர்க்கப்பட்டது. அந்நேரம் தெற்கு பாப்பான்குளம் மணிமுத்தாறு ஆகிய சபைகள் உருவாக்கப்படவில்லை.

### அம்பாசமுத்திரம் சேகர குருமனை

தற்போதுள்ள குருமனை அமைந்துள்ள இடம் அம்பாசமுத்திரம் TDTA தொடக்கப்பள்ளியில் நீண்ட பல ஆண்டுகளாக சிறப்பாகப் பணிசெய்து பணி நிறைவு பெற்ற கிருஷ்ணம்மா டீச்சர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட திருமதி. ஜெயபாய் ரூத் எபநேசர் அவர்களுடைய தாத்தாவிடமிருந்து வாங்கப்பட்ட இடமாகும்.

### இரண்டாம் தேவாலயம்

அம்பாசமுத்திரத்தில் 1871 இல் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவாலயம் முழுமையாக அகற்றப்பட்டு புதிதாக ஓடு வேயப்பட்ட மேற்கூறையுடன் கட்டப்பட்ட புதிய தேவாலயம் 1894 இல் பரி. பேதுரு ஆலயம் என்ற பெயரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இது அம்பாசமுத்திரத்தின் இரண்டாம் தேவாலயம்.

### அம்பாசமுத்திரம் சர்க்கிள் உருவாகுதல்

1945 இல் நல்லூர் சர்க்கிளில் இருந்து அம்பாசமுத்திரம் விக்கிரமசிங்கபுரம் புலவனூர் சேகரங்களை உள்ளடக்கிய அம்பாசமுத்திரம் சர்க்கிள் புதிதாக உருவாக்கப்பட்டது. அம்பாசமுத்திரம் சர்க்கிளுக்கான ஸ்தோத்திர பண்டிகை அதே ஆண்டில் கடையத்தில் தொடங்கப்பட்டது. அம்பாசமுத்திரம் சேகரத்தில் இருந்து 1943 இல் விக்கிரமசிங்கபுரம் சேகரம் எனும் புதிய சேகரம் உருவாக்கப்பட்டது. மாஞ்சோலை மற்றும் அதைச் சுற்றியுள்ள எஸ்டேட் கிராமங்களை உள்ளடக்கிய சிங்கம்பட்டி குரூப் எனும் புதிய சேகரம் உருவாக்கப்பட்டு அது அம்பாசமுத்திரம் சர்க்கிளோடு சேர்க்கப்பட்டது.

### இடைக்கால அம்பாசமுத்திரம் திருச்சபையின் வளர்ச்சி

1973 முதல் 1980 வரை பணி செய்த கனம். காந்தி செல்வின் ஐயரவர்கள் காலத்தில் பக்க அறை தேவாலயத்தையொட்டி கட்டப்பட்டது. தேவாலயப் புதுப்பித்தல் பணியும் அந்நேரம் நடைபெற்றது. புதுப்பிக்கப்பட்ட தேவாலயம் கனம். சவரிதாஸ் ஐயரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. காந்தி செல்வின் ஐயரவர்கள் காலத்தில் (1973-1980) மாதந்தோறும் சுவிசேஷ ஊழியம் நடைபெற்றது.

கனம். J. B. பிரெட்ரிக் ஐயரவர்கள் காலத்தில் (1980-1984) அம்பாசமுத்திரம் பரி. பேதுரு தேவாலயத்தின் வலது புறம் 10 அடி இடதுபுறம் 10 அடி விரிவாக்கம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வலதுபுற (வடபகுதி) விரிவாக்கப்பணி

தொடங்கப்பட்டது. அம்பாசமுத்திரம் தேவாலயத்தில் வெண்கல நாக்கு மணி பொருத்தப்பட்டது. கனம். பிரெட்ரிக் இரத்னராஜ் ஐயரவர்கள் காலத்தில் (1984 - 1988) சேகர நவ வருட ஸ்தோத்திர பண்டிகை தொடங்கப்பட்டது. அம்பாசமுத்திரத்தில் இருந்து ஆசிரியர் காலனி எனும் தனி சபை உருவாக்கப்பட்டது. கனம். N. பாக்கியராஜ் ஐயரவர்கள் காலத்தில் (1988-1993) தேவாலய வடபகுதி விரிவாக்கப் பணி நிறைவு பெற்று தேவாலயம் 03.03.1991 அன்று நெல்லை பேராயர். மகாகனம். ஜேசன். எஸ் தர்மராஜ் அவர்களால் மறு பிரதிஷ்டை செய்யப்பட்டது. கனம். D. நெல்சன் ஜெபத்துரை ஐயரவர்கள் காலத்தில் தேவாலய தென்குதி விரிவாக்கப் பணி தொடங்கப்பட்டு நிறைவு பெற்று நெல்லை பேராயர். மகாகனம். ஜேசன். எஸ் தர்மராஜ் அவர்களால் மறு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

கனம். பால் ரத்தினசாமி ஐயரவர்கள் காலத்தில் ஜனவரி முதலாம் நாள் உடன்படிக்கை காணிக்கை படைக்கும் திட்டம் அம்பாசமுத்திரத்திலும் சேகரத்தின் கிளை சபைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. கனம். தேவராஜ் ஞானசிங் ஐயரவர்கள் காலத்தில் அம்பாசமுத்திரம் அப்பர் தெருவில் குருமனைக்கென வீடு வாங்கப்பட்டது. டாக்டர் விக்டர் சாலமோன் அவர்களை கொயர் மாஸ்டராக கொண்டு அம்பாசமுத்திரத்தில் பாடகர் குழு தொடங்கப்பட்டது. அம்பாசமுத்திரம் சேகர் அளவில் இந்திய மிஷனரி சங்க விற்பனை விழா கல்லிடைக்குறிச்சியில் தொடங்கப்பட்டது. மேற்கண்ட இடைக்கால அம்பாசமுத்திரம் திருச்சபையின் வளர்ச்சியில் 1977 வரை 9 ஆண்டுகள் பணி செய்த திரு விக்டர் சதானந்தர் அவர்களும் 1977 முதல் 2002 வரை 25 ஆண்டுகளாக பணி செய்த திரு ஜவகர் வால்டர் அப்பாதுரை அவர்களும் செய்த சபை ஊழியம் என்றும் நினைவு கூறத்தக்கது.

### தற்கால அம்பாசமுத்திரம் சபை வளர்ச்சி

2004 முதல் 2006 வரை சேகர குருவானவராக பணி செய்த கனம். அதிசயராஜ் ஐசக் ஐயரவர்கள் காலத்தில் பழைய தேவாலயம் முற்றிலுமாக அப்புறப்படுத்தப்பட்டு புதிய தேவாலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. முன்னாள் பேராயர் மகாகனம். ஜேசன் எஸ். தர்மராஜ் அவர்கள் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டதோடு அப்பணிகளை விரைவில் நிறைவு செய்யும் வகையில் பெரிதானதொரு தொகையை பெற்றுக் கொடுத்தார்கள். அதன் காரணமாக வேகமாக தேவாலய கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றது. 09.05.2006 அன்று சேகர தலைவர் அருள்திரு. அதிசயராஜ் ஐசக் ஐயரவர்கள் தலைமையில் சபை ஊழியர் திரு. K. ஜோயல் ஹென்றி அவர்கள் காலத்தில் புதிய தேவாலயம் நெல்லை பேராயர் மகாகனம். ஜெயபால் டேவிட் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### அம்பாசமுத்திரம் தூய பேதுரு குருமனை

அம்பாசமுத்திரம் சேகர பழைய குருமனை முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டு அந்த இடத்தில் சிறப்பாக குருமனையும் அதை ஒட்டி வணிக வளாகக் கடைகளும் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த பணிகளுக்கு சேகர குருவானவர் கனம். அதிசயராஜ் ஐசக் ஐயரவர்களும், சபை ஊழியர் திரு. K. ஜோயல் ஹென்றி அவர்களும் உதவிகரமாக இருந்தார்கள்.

### தூய பேதுரு தேவாலய கோபுரக் கட்டுமானமும் பிரதிஷ்டையும்

அம்பாசமுத்திரம் தூய பேதுரு தேவாலய கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து பிரதிஷ்டை செய்யப்பட்ட பிறகு கோபுர கட்டுமான பணிகள் வேகப்படுத்தப்பட்டது. 2009 ஆம் ஆண்டு சபை ஊழியராக திரு சந்தோஷராஜ் அவர்களும் சேகர குருவானவராக அருள்திரு. ஜோசப் நீல் ஐயரவரகளும் பணி செய்த போது 03.07.2009 அன்று தேவாலய கோபுரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அம்பாசமுத்திரம் நகரத்தின் மையப் பகுதியில் தேவாலய கோபுரம் ஆண்டவருக்கு மகிமையாய் ஒளி வீசுகிறது.

### தேவாலயம் மர வேலைப் பணிகளால் அலங்கரிக்கப்படல்

அம்பாசமுத்திரம் சேகர குருவானவராக கனம். கிங்ஸ் ஹேமில்டன் ஐயரவர்கள் பணி செய்த காலத்தில் தேவாலய ஆல்டர் பகுதி உட்புறம் முழுவதும் நேர்த்தியாக அழகுற நேர்த்தியான மர வேலைப் பணிகளால் அலங்கரிக்கப்பட்டது.

### சமீப கால வளர்ச்சிப் பணிகள்

அம்பாசமுத்திரம் வேலாயுத நகரில் மிஷனுக்காக முன்பு வாங்கப்பட்ட நிலத்தில் மிஷன் வீடு சிறப்பாக கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த வீட்டில் திருமண்டல சபை ஊழியர் தங்கியிருந்து இறை பணி செய்து வருகிறார்கள்.

### அம்பாசமுத்திரம் திருச்சபையின் படிப்படியான வளர்ச்சி

அம்பாசமுத்திரம் திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்களின் எண்ணிக்கை 1912 இல் 67 ஆக இருந்தது. அந்த எண்ணிக்கை 1933 இல் 110 ஆகவும், 1953 - 1954 இல் 160 ஆகவும், 1970-1971 இல் 315 ஆகவும், 1988-1989 இல் 428 ஆகவும், 2002-2003 இல் 493 ஆகவும் படிப்படியாக உயர்ந்தது. அம்பாசமுத்திரம் திருச்சபையில் பரி. நற்கருணைக்காரர்களின் எண்ணிக்கை 1912 இல் 25 ஆக இருந்தது. அந்த எண்ணிக்கை 1933 இல் 39 ஆகவும், 1953 - 1954 இல் 68 ஆகவும், 1970-1971 இல் 115 ஆகவும், 1988-1989 இல் 240 ஆகவும், 2002-2003 இல் 292 ஆகவும் படிப்படியாக உயர்ந்தது.

### தற்போதைய அம்பாசமுத்திரம் திருச்சபை

தற்போது அம்பாசமுத்திரம் சபையில் 340 விசுவாச குடும்பத்தினரும், 900 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 725 பரி. நற்கருணைக்காரர்களும் உள்ளனர். சேகர தலைவர் மற்றும் குருவானவர் ஆக கனம். R. P. J. சில்வான்ஸ் ஐயரவர்கள் 2025 மே மாதம் முதல் பணி செய்து வருகிறார்கள். 2025 மே மாதம் முதல் திருமண்டல சபை ஊழியர் ஆக திரு. கிப்சன் செல்வின் ராஜ் அவர்கள் பணி செய்கிறார்கள். அம்பாசமுத்திரம் சபை ஊழியராக 2006 முதல் திரு. C. சந்தோஷராஜ் அவர்கள் பணி செய்து வருகிறார்கள்.



# தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்

**250 — வது பிறந்த நாள் விழா உரை**

தொடர்ச்சி....

**தேவ மோகினித் தோற்றம்**

'முந்தும் ஏவாள் சாராளும் ரேபேக்காள்
முதன்மை லேயாளுடன் ராகேல்
முறைகொள் தாமார் சிப்போராள் இராகாப்பு
மோசேமுன் மிரியாம் தெபோராள்
வந்த சற்பாத்தூர்க் கைமை யாகேல் ஏழ்
மக்கள் தாய் நகோமி ரூத் அபிகாய்
வளர் யொசேபாள் யோப்புவின் மகள் மூவாம்
ஆன கற்பு எஸ்தர் சூசன்னாள்
விந்தை சேர் அன்னாள் எலிசபெத்து அம்மாள்
மேன்மையின் மகதலை மரியாள்
மெய் கன்னி மரியாள் கிலேயோப்பை மரியாள்
மீண்டும் மார்த்தாள் கத்தரீனாள்
சிந்தை கித்தோரியாள் மம்மி தோற்காள்
சேருமிம் மாதர்கள் சிரசாய்த்
திவ்விய சீயோன் மகளென மேவித்
தேவ மோகினியும் வந்தனளே.'

**-- பெத்லகேம் குறவஞ்சி.**

1. முந்தும் ஏவாள் - ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள். ஆதியாகமம் 3: 20.
2. சாராளும் அவள் ஜாதிகளுக்கு தாயாகவும், ... ஆதியாகமம் 17: 16.
3. ரெபேக்காள் - பெத்துவேலின் மகள். ஆதி. 22: 22., ஈசாக்கின் மனைவி. ஆதி. 24: 67.
4. முதன்மை லேயாளுடன் - லாபானின் மூத்த மகள். ஆதி. 29: 16., யாக்கோபின் மூத்த மனைவி.
5. ராகேல் - லாபானின் இளைய மகள். ஆதி. 29: 16., யாக்கோபின் இரண்டாம் மனைவி.
6. முறைகொள் தாமார் யூதாவின் மகன்களான ஏர், ஓனான் என்பவர்களின் மனைவி. ஆதி. 38: 6-9., சொன்ன வாக்கை யூதா நிறைவேற்றாததினால் (ஆதி.38: 11), அதை அவனுக்கு உணர்த்தும் விதமாக அவள் செய்த செயல் (ஆதி. 38: 14-26), யூதாவுக்கு தாமார் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றாள். (ஆதி. 38:27-30)
7. சிப்போராள் எத்திரோ (ரெகுவேல்) என்னும் மீதியானிய ஆசாரியனின் மகள், மோசேயின் மனைவி. (யாத்திராகமம் 2:16,21., 3: 1.)
8. ராகாப்பு - எரிகோ பட்டணத்தை வேவு பார்க்கப் போன எபிரேயரை உபசரித்து, அந்த ஊராரின் கைக்கு தப்புவித்த பெண். (யோசுவா 2: 1-6)
9. மோசே முன் மிரியாம் - ஆரோன், மோசே என்பவர்களின் மூத்த சகோதரி, தீர்க்கசரிசி. யாத்திராகமம் 15: 20., மோசேக்கு விரோதமாக பேசினதினால் குஷ்டரோகியானாள். எண்ணாகமம் 12: 1-10.
10. தெபோராள் - லபிதோத் என்பவரின் மனைவி. தீர்க்கதரிசியும் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறவளுமாயிருந்தாள். நியாயாதிபதி கள் 4: 4., கவி பாடும் திறனும் இருந்தது. நியா. 5: 1.
11. வந்த சாறிபாத் ஊர்க் கைமை எலியா சாறிபாத் ஊருக்கு வந்தபோது அங்கே அவனை பராமரிக்கும்படி கடவுளால் நியமிக்கப் பட்ட விதவைப் பெண். (1 இராஜாக்கள் 17: 8 - 24), புதிய ஏற்பாட்டில் இவ்வூர் சரெப்தா என்றழைக்கப்பட்டது. (லூக்கா 4: 25, 26)
12. யாகேல் கேனியனான ஏபேரின் மனைவி. நியா. 4: 17., கானானியரின் இராஜாவாகிய யாபீனின் சேனாபதி சிசெராவை கூடார ஆணியால் நெற்றியில் அடித்து கொன்று போட்டவள். நியா. 4:21.
13. ஏழ் மக்கள் தாய் நகோமி - எலிமெலேக்கின்

மனைவி. ரூத் 1: 2., ரூத்தின் மாமி., .... உன்னைச் சிநேகித்து, ஏழு குமாரரைப் பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்றாளே என்றார்கள். ரூத் 4: 15., ரூத் என்னும் நகோமியின் மருமகள் ஏழு குமாரருக்கு ஒப்பானவள் மேலானவள் என்று புகழப்பட்டதினால், 'ஏழ் மக்கள் தாய் நகோமி' என்று குறிப்பிடுகிறார் சாஸ்திரியார்.

14. ரூத் - மோவாபிய பெண், நகோமியின் மருமகள். ரூத் 1: 4., பிறகு பெத்லகேம் ஊரானாகிய போவாஸ் இவளை திருமணம் செய்தான். ரூத் 4: 10., இவர்களுக்குப் பிறந்தவன் ஓபேத். ரூத் 4: 17., ஓபேத்தின் பேரன் தாவீது இராஜா. மத்தேயு 1: 5,6.

15. அபிகாயில் - நாபாலின் மனைவி. 1 சாமுவேல் 25: 3., நாபால் மரித்த பிறகு தாவீதுக்கு அவள் மனைவியானாள். 1 சாமு. 25: 42., தாவீதின் சகோதரிகளில் ஒருவர் பெயரும் அபிகாயில். 1 நாளாகமம் 2: 16.

16. வளர் யோசேபாள் - இஸ்ரவேலின் இராஜாவாகிய யோராமின் மகள், அகசியாவின் சகோதரி. 2 இராஜாக்கள் 11: 2., அகசியாவின் தாய் அத்தாலியாள் யோவாசை கொல்ல முயன்ற போது அவனைக் காப்பாற்றி ஒளித்து வைத்து வளர்த்து, அவனை இராஜாவாக்கினாள். 2 இராஜாக்கள் 11: 1-21., யோவாசை வளர்த்ததினால் 'வளர் யோசேபாள்' என்றழைக்கிறார் சாஸ்திரியார்.

17. யோபுவின் மகள் மூவர் - எமிமாள், கெத்சீயாள், கேரேனாப்புக். யோபு 42: 13,14.

18. கற்பு எஸ்தர் - ஆமானின் சூழ்ச்சியினால் யூதர்களைக் கொல்ல அகாஸ்வேரு ராஜா கட்டளையிட்டிருந்தான். அந்த சூழ்ச்சியை முறியடித்து யூதர்களைக் காப்பாற்றினவள். (எஸ்தரின் சரித்திரம்)

19. சூசன்னாள் - ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவி. லூக்கா 8:3.

20. விந்தை சேர் அன்னாள் ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளு மாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள். லூக்கா 36-38.

21. எலிசபெத்து அம்மாள் -... ஆசாரியனாகிய சகரியாவின் மனைவி. (லூக்கா 1: 5), அப்பொழுது அதின் தாய்: அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிடவேண்டும் என்றாள். லூக்கா 1: 60., யோவான் ஸ்நானனின் தாய்.

22. மேன்மையின் மகதலேனா மரியாள் - இயேசுவுக்கு ஊழியஞ் செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்த அநேக ஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும் (ஒருவர்)... மத்தேயு 27: 55, 56., உயிர்த்தெழுந்த இயேசுவை முதலில் கண்டவர்களில் ஒருவர், இயேசுவின் உயிர்த்தெழுதலை முதலில் அறிவித்தவர்களில் ஒருவர். (மத்தேயு 28: 1-9, மாற்கு 16: 9)

23. மெய் கன்னி மரியாள் - இயேசுவின் தாய். (லூக்கா 1: 28-31)

24. கிலெயோப்பா மரியாள் - இயேசுவினுடைய தாயின் சகோதரி. இயேசுவின் சிலுவையினருகே நின்றுக்கொண்டிருந்தவர்களில் ஒருவர். (யோவான் 19: 25)

25. மீண்டும் மார்த்தாள் -... இயேசு ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரி அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்... லூக்கா 10:38,39

26. கத்தரீனாள் - Catherine என்ற பெயர், கிறிஸ்தவர்களிடத்தில் மிகவும் புகழ் வாய்ந்த பெயராக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த பெயர் திருமறையில் இல்லை. இந்த பெயருக்குரியவர் எகிப்தில் அலெக்ஸாண்ட்ரியா பட்டணத்தில் கி.பி. 4 -ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்தவர். இவர் கிறிஸ்தவ துறவி, இளவரசி மற்றும் அறிஞர் ஆவார். 14 வயதில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். அதன் பிறகு நூற்றுக்கும் மேற்பட்ட மக்களை கிறிஸ்துவுக்குள்ளாக வழிநடத்தினார். இப்பெண்ணை நினைவுகொள்ளும் பொருட்டாகவே அக்காலத்தில் பிள்ளைகளுக்கு இப்பெயரை சூட்டினர். இன்றும் இந்த பெயர் கிறிஸ்தவ குடும்பங்களில் சூட்டப்பட்டு வருகிறது.

27. சிந்தை கித்தேரியாள் - கி.பி. 2 -ஆம் நூற்றாண்டில் ரோமில் பிறந்தவர். கன்னியரும் கிறிஸ்தவ மறைசாட்சியுமாவார். இவர் ரோம பேரரசின் சமயத்தை ஏற்காததால், சிறை வைக்கப்பட்டு, பிறகு தலை துண்டிக்கப்பட்டு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார் என்கிறது வரலாறு. இவரைப் பற்றிய வரலாற்றை, தேம்பாவணி காப்பியம் கண்ட இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர் என்பார் (கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி / Constantine Jo-

seph Beschi) 'கித்தேரியம்மாள் அம்மானை' என்ற இலக்கியமாக படைத்துள்ளார். இன்றும் இது தமிழ் இலக்கிய உலகில் சாட்சியாக உள்ளது.

28. மம்மி தொற்காள் -சீரிய மொழியில் தபித்தாள். கிரேக்க மொழியில் தொற்காள். நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தவள். அப்போஸ்தலர் 9: 36, வியாதிப்பட்டு மரித்துப்போன இவளை பேதுரு உயிரோடு எழுப்பினார். (அப். 9: 37-40), மரித்துப் பிரேதமானவளானதால் 'மம்மி' (Mummy - இறந்த மனிதரின் பதப்படுத்தப்பட்ட உடல்) என்று குறிப்பிடுகிறார்.

இத்தகைய பெண்களையெல்லாம் தலைமையாகக் கொண்டு, இனிய சீயோன் மகள் (சீயோன் குமாரத்தி), தேவ மோகினியாக (தெய்வத்தை விரும்பினவளாக) வந்தாளே.

**சாஸ்திரக் கும்மி**

***சாதிகள் அடையாளம் – தாலி***

'பொஸ்தகத் தாலிக் குருசு வைத்துச் சிலர்
போட்டுக் கொண்டது உண்டு என்றாலும்
வித்தாரமாக மறுபுறந் தன்னிலே
வேற்றுரு ஏதடி ஞானப் பெண்ணே.' (139)
'ஒன்றில் பராபரனைச் சேவி அல
தொன்றில் பிசாசை யெனும் சேவி
நன்றியது அன்றி வெது வெதுப்பாக நீ
ரண்டகம் செய்யாதே ஞானப் பெண்ணே.' (140)

**சொற்பொருள்**

> பொத்தகம் - சித்திரபடம், உருவம்

> வித்தாரமாக - விரிவாக, பெரிதாக

> நன்றியதன்றி - நன்றியற்று

> இரண்டகம் - இருமனம்

**பொருள்**

139. ஒரு பக்கத்தில் சிலுவை உருவம் பதித்த தாலியை சிலர் போட்டுக்கொண்டனர் என்றாலும், அவர்களே மறு புறத்தில் வேறு சமய அடையாள உருவத்தை பதிப்பது ஏனடி ஞானப் பெண்ணே.

140. ஒன்று பராபரனை சேவித்துக்கொள், அல்லதெனில் பிசாசை சேவி. நன்றியற்றுபோய் வெது வெதுப்பாக நீ இருமனம் கொள்ளாதே ஞானப் பெண்ணே.

முந்தை கவிகளில் (137, 138), இப்படி தாலியில் சிலுவையையும், வேற்றுசமய அடையாள உருவத்தையும் ஒருசேரப் பதித்து, பராபரனின் ஆலயத்திற்குள் வெட்கமின்றி வருவது ஏனடி ஞானப் பெண்ணே என்று கடிந்துரைக்கிறார். இப்படியும் சில கிறிஸ்தவர்கள் சாஸ்திரியாரின் காலத்தில் இருந்ததை இவ்விடத்தில் பதிவு செய்கிறார்.

இதனைச் சிந்திக்கும் போது ஒரு கதை நினைவுக்கு வருகிறது, அதாவது கத்தோலிக்கத் திருச்சபைகளில் பற்பல சிற்பங்கள் இருக்கும். ஒரு பெண் அப்படி அந்த சிற்பங்களையெல்லாம் பார்த்து வணங்கிக் கொண்டே சென்றார். அதில் ஒரு சிற்பம், தேவதூதனும் சாத்தானும் இருக்க, தேவதூதன் சாத்தானை தன் காலின்கீழ் மிதித்துக் கொண்டிருப்பது போல் இருந்தது. அந்த பெண் முதலில் தேவதூதன் சிலையை தொட்டு வணங்கினார். பிறகு தேவதூதன் காலின்கீழ் மிதிப்பட்டுக்கிடந்த சாத்தானின் சிலையையும் வணங்கினார். இதை பார்த்துக்கொண்டிருந்த ஒருவருக்கு அதிர்ச்சியும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஏற்படவே, அவர் அந்தப் பெண்ணிடம், அம்மா தேவதூதனை வணங்கினீர்கள் அவர் கடவுளின் தூதுவர். ஆனால் சாத்தானைத் தொட்டு வணங்கினீர்களே ஏன் என்று கேட்டார். அதற்கு அந்த பெண், ஐயா நீங்கள் கேட்பது சரிதான், பரலோகம் போனால் சரி, இந்த கடவுளின் தூதர் என்னைக் கவனித்துக் கொள்வார். ஒருவேளை நரகத்துக்குப் போனால் அங்கு சாத்தான்தானே தலைவன். எதற்கும் இருக்கட்டுமே என்றுதான் இருவரையும் கும்பிட்டேன். இப்போது நான் எங்கு சென்றாலும் எவராவது ஒருவர் என்னை கவனித்துக் கொள்வாரே என்றாராம். இன்றைய கிறிஸ்தவத்திலும் இத்தகைய இரட்டை நிலைப்பாடு இருப்பதை மறுக்கமுடியாது.

**ஜெபமாலை – சிலுவை தியானம் 28, கவி 25.**

'சாவிலும் நன்றாகச்
சத்துவங் கொண்டு அழற் பாதாளத்து
ஓவிய பயத்துக்குந் தீங்கு
பாதைக்கு நீங்கலாக்கித்
தேவ சமாதானத்தாற்
செறிந்து வாழ்ந்திருக்கச் செய்தாய்
பாவல நெல்லை வேத
நாயகன் பாடுந் தேவே.'

சாவில் நல் நம்பிக்கை உண்டாக பெலப்பட்டு, தீ நரக பாதாளத்து பயத்துக்கும், தீங்கு பாதைக்கும் தப்புவித்து, தேவ சமாதானத்தால் நிறைந்து வாழ்ந்திருக்கச் செய்தாய், பாவலன் நெல்லை வேதநாயகன் பாடும் பராபரனே.

இந்த பாவின் பின்னனி காரணத்தை 'கவனிப்பு' என்ற பகுதியின் வழியாக விளக்குகிறார் சாஸ்திரியார்.

**கவனிப்பு**

இதற்கு முந்தின ஜெபமாலை 27 'திருவிளையாட்டு ஊஞ்சல்'. இது ஞான ஊஞ்சல் - தேவ துதியாயிருக்க, மனுஷன் கலியானத்திலே பாடி மாப்பிள்ளையையும் பெண்ணையும் வைத்து ஊஞ்சலாட்டினதின் நிமித்தம், நேபுகாத் நேச்சாருக்கு (தானியேல் 4: 24, 30-37) ஒப்பாய் வேதநாயக சாஸ்திரியின் புத்தி சிதறிப்போகத் தக்கதாக வந்த கொடிய ஆபத்து இந்த 28 -ஆம் ஜெபமாலையாகிய 'சிலுவை தியானத்தினாலே' நிவர்த்தியாயிற்று.

அவன் (வேதநாயகன்) சொற்பனங்களினாலும்

திகிலினாலும் நிறையப்பட்டு, தன் வீட்டைவிட்டுக் கல்லறைத் தோட்டத்துக்குச் சமீபமாய், சங்கை. தகப்பனார் சுவார்ட்ஸ் ஐயர் வீட்டிலே குடியிருந்த போது, தரங்கன்பாடி டென்மார்க்கு மந்திரி பிரகாசம் பிள்ளை தற்செயலாய் மூன்றுதரம் வந்து, இந்தச் சிலுவைத் தியானத்தைப் பாடச்சொல்லி வருந்திக்கொண்டு உரை கொடுத்தபடி பாடி முடித்தது.

**தஞ்சை சபை**

'சங்கை போர்ந்திலங்கும் தஞ்சை
சுவார்ட்ஸ் ஐயர் சபைகள் நாங்கள்' - ஜெபமாலை 17: 10.
தஞ்சை சபை வளம்
'முக்கிய பிரதான குருவும் கோவிலும் சாதி
முறைமையும் சதுர் வளமையும்...
மூதறிவுளோர்கள் துரைமார்கள் தேச அதிபர்
முதலான பெரியோர்களும்
திக்கெலாம் நிலைகொண்ட கீர்த்தியும் செல்வமும்
திரளான நாட்டையர்மார்
தேர்ந்த உபதேசிமார் கூட்டமும் விற்பனர் (கல்வியிற் சிறந்தோர் புலவர்)

செறிந்த பள்ளிக் கூடமும்
பக்கிஷக் (பட்சம்) கவிவானர் அண்ணாவிமார்களும்
பாட்டகர்களின் பெருமையும்
பாரித்த (மிகுதியான) சபையும் சகோதரக் கூட்டமும்
பத்தியும் (பக்தி) புத்தியும் உள்ள
சக்கிய (சிநேகம்) சுவிசேஷ சபை தஞ்சை அல்லாதிலைச்
சற்குரு (ஞான ஆசிரியர்) சுவார்ட்ஸ் ஐயரே
தத்துவ ஞான சொரூப நித்திய சீவப் பிரபல
சத்திய வேதச் சபைகளே',

**-- வே. சாஸ்திரியாரின் தனிப்பாடல்.**

**விருத்தம்**

'நினைத்தது தரும் சகாயா நித்தியக் கிருபைத் தூயா
வினைத்துயர் தவிர்க்கும் மாயா வினோத உற்பன உபாயா
உனைத் துதி செய்வோம் ஓயாது ஊழியோடு ஊழி நேயா
அனைத்துள உயிர்க்கும் தாயா அன்பையா அல்லேலூயா.'

**- ஆரணாதிந்தம், கீர்த்தனை விருத்தம்.**

தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களின் 250 ஆவது பிறந்தநாள் நினைவு உரையை இதுகாறும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் இதழில் வெளியிட்டுவந்த கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தார்க்கும், இதனைப் படித்தறிந்து இன்புற்ற ஒவ்வொருவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***பராபரனுக்கு தோத்திரம்.***


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
| --- | --- |
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL
A/c Number : 1748 020000 5614
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
(CHRISTAVA VARALATRU SUVADUGAL)
என்ற பெயரில் எடுக்கவும்



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com





Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**


Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401